Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 166 | புதன்கிழமை | சித்திரை 29 ஆம் நாள் 12 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தீவுகளில் வெளியார் நடமாட கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 12

அனலைதீவு மற்றும் எழுவை தீவு போன்ற பகுதிக ளுக்கு அத்தியா 18

# முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது இனப்படுகொலையே

## ஆயர்கள் கூட்டாக அறிக்கை நினைவேந்தலுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 12

2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை வடக்கு – கிழக்கு ஆயர்கள் மன்றம் கூட்டாக உறுதிப்படுத்தியுள்ளது. மே 18 நினைவேந்தலைக் கடைப்பிடிக்குமாறு வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயத்தை ஆயர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். 18

## மதுபானசாலைகள் யாவும் மாலை 6 மணிக்கு பூட்டு

கொழும்பு, மே 12

நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மாலை 6 மணிக்கு பின்னர் திறந்து வைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இந்தத் தடை நேற்றிலிருந்து மறுஅறிவித்தல் வரைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

## மாகாணங்களுக்கு இடையில் புதிய கட்டுப்பாடுகள் அமுல்!

- எல்லைகளில் விசேட அதிரடிப் படை
- பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து
- போக்குவரத்தில் கடும் இறுக்கம்

கொழும்பு, மே 12

கொரோனாப் பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில், நேற்று நள்ளிரவு முதல் மாகா 18

## கொரோனா நேற்று 2,530

கொழும்பு, மே 12

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 530 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 60ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 641 பேர் குணமடைந் 17

முச்சந்தி முரளி



"அப்ப இனிமேல் 6 மணிக்கு பிறகு 'குடிமகன்களுக்கு' ஊரடங்கு தான் கண்டியளோ"

## வடக்கில் தொற்றாளர்களை தங்கவைக்க 9 நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 12

வடக்கு மாகாணத்தில் அறிகுறி இல்லாமல் கண்டறியப்படும் கொரோனாத் தொற்றாளர்களைத் தங்க வைப்பதற்கு 9 நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 3 நிலையங்களும், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு நிலையங்களும் இயங்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே கோப்பாய் தேசிய 18

## தொற்றாளர் கூடிய மாகாணங்களே தடுப்பூசி ஏற்றலில் முதல் தெரிவு

கொழும்பு, மே 12

தொற்றாளர் எண்ணிக்கை கூடிய மாகாணங்களிலேயே தடுப்பூசி முதல் கட்டமாக ஏற்றப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா 18

வீட்டுத்திட்டத் தெரிவில் பொருத்தமற்ற பயனாளி

## பணத்தை மீளச்செலுத்த வேண்டியது மாவட்டச் செயலருடைய பொறுப்பு

யாழ்ப்பாணம், மே 12

வீடமைப்பு திட்டத்துக்கு பொருத்தமற்ற பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இனம் காணப்பட்டால் அந்தப் பயனாளிக்கு வழங்கப்பட்ட பணத்தை மீளப் பெற்று, செலுத்துவது மாவட்டச் செயலரின் பொறுப்பு என்று கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் மேம்பாட்டு 18

ராஜீவ் கொலை வழக்கு

## சிறையில் வாடும் ஏழு பேரையும் விடுவிக்க ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, மே 12

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை 18

## 55 பேருக்கு வடக்கில் கொரோனா!


யாழ்ப்பாணம், மே 12

வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களில் 35 பேர் யாழ்ப்பா 18




Digitized by Noolaham Foundation

# நாடு முழுவதும் தேடுதல் வேட்டை



**கொழும்பு, மே 12**

**இலங்கையில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் நெருங்கிப் பழகியவர்களைத் தேடி புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

200 பேரைக் கொண்ட புலனாய்வு அதிகாரிகள், நாடு பூராகவும் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் கண்டு அந்த நபர்களைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய தொற்றாளர்கள் புதிய வகை வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு உறுதிப்படுத்தியிருந்தது. இந்த வைரஸ் மற்றைய வைரஸை விடவும் பரவும் வேகம் அதிகமானது என்றும் ஆய்வுக் குழு குறிப்பிட்டிருந்தது.

தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ள நபர்கள் தொடர்புகளைப் பேணிய மற்றும் நெருக்கமான நபர்களைத் தேடி புலனாய்வு அதிகாரிகள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-22)



## யாழுக்கு கடத்தப்படவிருந்த முதிரைமரக் குற்றிகள் மீட்பு

### ஒருவர் கைதாகி பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், மே 12

மாட்டெருவால் மறைக்கப்பட்டு, லொறி ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட முதிரைமரக் குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் அந்த மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. நையினாமடு காட்டுப்பகுதியில் வெட்டப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்படவிருந்தன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். மரக்குற்றிகளை ஏற்றி வந்த லொறியின் சாரதி கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார். (ப)



## வவுனியாவில் சமூகத் தொற்று

### பரவலாக மூவர் தொற்றுடன் அடையாளம்

வவுனியா, மே 12

வவுனியாவில் மேலும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கொவிட் தொற்று அதிகரித்துவரும் நிலையில் பரவலாக எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். இதன் முடிவுகள் சில நேற்று பகல் வெளியாகின.

அதில் வவுனியா ஓமந்தை, வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் ஒருவருக்கும், கல்மடு பகுதியில் ஒருவருக்கும் என 3 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மூன்று பேரும் புதிதாக சமூக மட்டத்தில் இருந்து இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து அவர்களை கொரோனா மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ப-18)

## ஒதியமலைக் கிராமத்துக்கான தனியார் பஸ் சேவை நிறுத்தம்

முல்லைத்தீவு, மே 12

ஒதியமலைக் கிராத்துக்கென ஆரம்பிக்கப்பட்ட தனியார் பஸ் சேவை, ஆரம்பிக்கப்பட்டு 3 நாள்களின் பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீள் குடியேற்றத்தின் பின்னர் 10 ஆண்டுகளாக ஒதியமலை கிராமத்துக்கான எந்த பஸ் சேவைகளும் இடம்பெறாத நிலையில், கடந்த மாதம் 21ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலரால் ஒதியமலை கிராமத்தில் இருந்து நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி வரையான தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்டு தொடர்சியாக 21, 22, 23ஆம் திகதிகளில் இடம்பெற்ற தனியார் பஸ் சேவை அதன் பின் நிறுத்தப்பட்டுள்ளது.

வருமானம் போதுமானதாக இல்லை என பஸ் சேவைகள் மூன்று நாள்களுடன் இடைநிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

மருத்துவமனைக்குச் செல்வோர் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, "சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் அது தொடர்பாக கருத்துத் தெரிக்க முடியும் - என்றார். (ஐ-13)

## வீடுகளில் முடங்கியுள்ள மக்கள் டெங்கு தொடர்பில் அவதானம்!

### சுகாதாரப் பிரிவு அறிவிப்பு

சாவகச்சேரி, மே 12

கொரோனாத் தொற்று காரணமாக வீடுகளில் உள்ளோர், தற்போது பிரதேசத்தில் மழைபெய்து வருவதால் டெங்கு நோய்க்கு ஆளாவதைத் தவிர்க்கும் வகையில் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் அடிக்கடி மழைபெய்து வருகிறது. இதனால் குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் பொருள்களில் டெங்கு நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் குடியிருப்பாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் காணப்படும் நீர் ஏந்துப் பொருள்களை அப்புறப்படுத்தி துப்புரவாக வைத்திருப்பதுடன், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் காணப்படின் அவற்றை அகற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## மக்களுக்கு இடரை ஏற்படுத்தக்கூடிய மரங்களையே அகற்ற நடவடிக்கை

### ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 12

வீதி ஓரங்களிலுள்ள பாதுகாப்பற்ற மரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டன என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன் தெரி வித்துள்ளார். பச்சை மரங்களை அகற்ற முற்பட்டமைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று உதயனில் நேற்று வெளியான செய்தி தொடர்பில் பிரதேச செயலர் தனது விளக்கத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், வீதி ஓரங்களில் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும் மரங்களை அகற்றுதல் தொடர்பான முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் பணிப்புக்கு அமைவாக, திரு முறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் வீதியோரங்களில் இடர்களை ஏற்படுத்தக்கூடிய நிலையிலுள்ள மரங்கள் தொடர்பாக கள அறிக்கை தருமாறு பணிக்கப்பட்டதற்கு அமைய கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதி கிராம அலுவலர் நடராசா ஜெயசுதனின் கள அறிக்கையின் பிரகாரம் வீதியில் ஏற்படும் இடரை தவிர்ப்பதற்காக என்னால் அரச மர கூட்டுத்தாபனத்தினருக்கு மரத்தை வெட்டி அகற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. மரக்கூட்டுத் தாபனத்தினர் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மக்களின் தலையீட்டின் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## நிஷாரா ஜெயரட்னவின் பணிக்காலம் நிறைவு

கொழும்பு, மே 12

சட்டமா அதிபர் டபுல்ல டி லிவேராவின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜெயரட்னவின் பணிக்காலம் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது என்ற தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த உதவிச் சட்ட மா அதிபர் விக்கும் டீ ஆப்ரு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஏற்கனவே சட்டமா அதிபர் லிவேராவுக்கு கனடாவுக்கான உயர்ஸ்தானிகர் பதவி பரிந்துரைக்கப்பட்டமையும் அதனை அவர் நிராகரித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ப-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிலையைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 12**
**இந்தியாவின் நிலைமை இங்கு ஏற்படாமல் இருக்க, கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்க வேண்டிய அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. தொடர்ந்து முன்னெடுத்தும் வருகின்றது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின், சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் இலங்கை தொடர்பில் விடுத் துள்ள எச்சரிக்கை தொடர்பிலும், தற்போதைய நிலைமை நீடித்தால் இந்தியாவின் அவலம் இங்கும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதல்லவா எனவும் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

செப்ரெம்பர் மாதமளவில் என்ன நடக்கும் என்பதைவிடவும், தற்போதைய வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தி நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கே அரசு முயற்சிக்கின்றது.

அதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் அரசு செய்துள்ளது. தொடர்ந்தும் செய்துவருகின்றது. மேற்படி ஆய்வு நிறுவனத்தின் வெளியீடு தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அந்த நிறுவனத்திடம் விளக்கம் கேட்டுள்ளது. இறப்பு எண்ணிக்கை எவ்வாறு 20 ஆயிரம் வரை உயரும் என விஞ்ஞான ரீதியிலான தர்க்கம் கோரப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் முதலாவது அலையின்போது அனுபவமின்றியே நாம் சவாலை எதிர்கொண்டோம்.

தற்போது அனுபவம் உள்ளது. எனவே, அரசு என்ற வகையில் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார். (ப-44)

# சர்வகட்சி கூட்டம்; விரைவில் தீர்மானம்

கொழும்பு, மே 12
கொரோனா வைரஸை இல்லாதொழிப்பதற்கு எதிர்க்கட்சி யினரின் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு அரசு தயார். சர்வ கட்சி கூட்டத்தை கூட்டுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அறிவிப்பு விடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

சர்வக்கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் அதில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பவரலைக்கட்டுப்படுத்துவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. தமக்குள்ள சர்வதேச தொடர்பை பயன்படுத்தி ஏதேனும் விதத்தில் எதிர்க்கட்சி உட்பட எந்தவொரு தரப்பும் ஒத்துழைப்பு நல்கினால் அதைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு தயார். சர்வகட்சி கூட்டத்துக்கான கோரிக்கை விடுக்கப்பட்டு 24 மணிநேரம்தான் ஆகின்றது.

இது தொடர்பில் அரச தரப்பில் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அறிவிப்பு விடுக்கப்ப டும். கொரோனாத் தொற்று ஏற்பட்டு ஒன்றரை வருடங்களுக்குமேல் ஆகின்றது. எதிரணி கூறுவதுபோல அவர்களுக்கு சர்வதேச தொடர்பு இருக்குமானால் அதனைப் பெற்று ஒத்துழைப்பு வழங்கலாம். ஆனால் இன்னும் அவ்வாறு வழங்கப்படவில்லை.

ஒத்துழைப்பு வழங்கப்படும் என சர்வதேச நாடுகள் எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்துள்ளனவா என்பது பற்றி எமக்கு தெரியாது. அது பற்றி எதிர்க்கட்சித் தலைவரிடம் அறிவிப்பு விடுக்கவில்லை. அவ்வாறு அறிவித்தால், நாமும் தூதுவர்களுடன் கலந்துரையாடலாம்.

ஆனால் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள ஒத்துழைப்புகள் குறித்து, தொடர்ந்தும் அவ்வாறான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றே வெளிநாட்டு தூதுவர்கள் கூறியுள்ளனர்.

இதைவிடவும் விசேடமாக ஏதாவது அறிவித்திருந்தால் அது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அறிவிக்கலாம்- என்றார். (ஏ-44)

# அத்தியாவசிய சேவைகள் கட்டுப்பாடால் தடைப்படா!

### அரசு கூறுகின்றது

கொழும்பு, மே 12
அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாத வகையில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய சேவைகள், ஏற்றுமதி சார்ந்த தொழில்கள், வேளாண்மை மற்றும் மீன்வளத் தொழில் ஆகியவை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் செயற்படும்.

முழு நாட்டுக்கும் ஒரே நேரத்தில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, கொரோனாத் தொற்று எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கட்டுப்பாடுகள் மற்றும் அத்தியாவசிய சேவை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பான முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டது. அது கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியால் அல்ல எடுக்கப்பட்டதல்ல- என்றார். (ஏ-இ)

# வவுனியாவில் 2வது டோஸ் தடுப்பூசி நேற்று ஏற்றப்பட்டது

வவுனியா, மே 12
வவுனியா மாவட்டத்தில் பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கு 2வது டோஸ் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்திய மற்றும் சீன அரசுகளால் இலங்கை அரசுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு மாவட்டங்களிலும் தேவையின் பொருட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில், வவுனியா பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கான இரண்டாவது டோஸ் கொவிட் 19 தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை வவுனியா பொதுமருத்துவமனையில் நடைபெற்றது. வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 500 தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 10 பேர் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை முன்னரே ஏற்றியிருந்தனர். இரண்டாம் கட்டமாக பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினருக்கு இத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ப-18)

# மாறுபட்ட தடுப்பூசிகள் விவகாரம் மருத்துவர்களிடமே இறுதி முடிவு

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு,மே 12
ஒருவர் இருவகையான தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்ளலாம் என்று துறைசார் நிபுணர்கள் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். எனினும், இது தொடர்பில் எமது நாட்டு மருத்துவர்களே இறுதி முடிவெடுப்பர். இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதயகம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது தடுப்பூசி விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசியைக் கொள்வனவு செய்வது தொடர்பில் இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தாலும், இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்ததால் தடுப்பூசி ஏற்றுமதி இடை நிறுத்தப்பட்டது. இதனால் சுமார் 6 லட்சம் பேருக்கு மேற்படி தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்தோனேசியா மற்றும் ஆபிரிக்க நாடொன்றில் அஸ்ட்ராஜெனகா மேலதிக தடுப்பூசிகள் உள்ளன என்று தகவல் கிடைத்தது. இவற்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உலக சுகாதார நிறுவனம் ஊடாக பெறுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அடுத்த மாதத்துக்குள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

முதல் கட்டமாக ஒரு வகையான கொவிட் தடுப்பூசி செலுத்தினால், இரண்டாம் கட்டமாக மற்றுமொரு வகை தடுப்பூசியையும் செலுத்தலாம் என்று துறைசார் நிபுணர்கள் கருத்துகளை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் இலங்கை மருத்துவர்கள் இறுதி முடிவெடுப்பார்கள். எனவே, முதல் சுற்றில் தடுப்பூசியைச் செலுத்தியவர்கள் இரண்டாம் சுற்றில் தடுப்பூசியைச் செலுத்துவது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை." - என்றார். (4,44)

# நேற்றுமுன்தினம் நடைபெற்ற பூநகரி பிரதேச சபை அமர்வு

கிளிநொச்சி,மே 12
பூநகரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதன்போது பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட இடங்களில் பழுதடைந்த நிலையில் காணப்படும் வீதி மின் விளக்குகளை சீரமைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுச்சந்தைகள் வர்த்தக நிலையங்கள் போன்ற மக்கள் கூடும் பொது இடங்களில் கொவிட்-19 நோய்த் தொற்றை தடுக்கும் முன்னெச்சரிக்கையாக முகக்கவசம் அணிதல் தொற்றுநீக்கியை பயன் படுத்துதல் போன்றவற்றை வலியுத்தி பதாகைகள் காட்சிப்படுத்துவது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா மூன்றாவது அலையை கட்டுப்படுத்த கிளிநொச்சியில் ஆய்வு

**கிளிநொச்சி, மே 12**

**வேகமாகப் பரவி வரும் கொரோனாவின் 3ஆவது அலை நிலையை கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டுப்படுத்துவது தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.**



மாவட்டத்தில் அதிகரித்த கொரோனா தொற்றாளர்கள் பதிவாகி வருகின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவது பற்றியும் அதற்கான வேலைத் திட்டங்களை அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோருடன் இணைந்து எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா 3ஆவது அலையை கட்டுப்படுத்துவதற்கு ஒன்றிணைந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கி மாவட்டத்தில் செயற்படுவது பற்றியும் பேசப்பட்டது.

இக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எஸ். சிறிதரன், கிளிநொச்சி படைகளின் தளபதியும் கொரோனா தடுப்புச் செயலணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரனசிங்க, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் என். சரவணபவன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ப-214)

## அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பான இணைய வழி கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்டது.

புலம்பெயர் வாழ் இத்தியடி பிரிவைச் சேர்ந்த மக்களும் உள்ளூர்மக்களும் இணைந்து இணைய வழி கலந்துரையாடலை நடத்தினர்.

இதில் இத்தியடி இந்து இளைஞர் மன்றத்தின் மீளுருவாக்கம், கணேசர் சனசமூக நிலைய நிர்வாக சீர்படுத்தல் மற்றும் கிராமத்துக்கான குடிதண்ணீர் வழங்கல் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.(ஜ-9)

## சோழமண்டலக்குள விவசாய வீதிகள் கனரக வாகனங்களால் கடும் சேதம்

### விவசாயிகள் கவலை

மன்னார், மே 12

மன்னார் மாந்தை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இலுப்பைக் கடவைக் கிராமத்தில் உள்ள சோழமண்டல குளத்தின் விவசாய வீதிகள் கனரக வாகனங்களின் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன என்று அப்பகுதி விவசாயிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.



மன்னார் மாந்தை மேற்கு இலுப்பைக் கடவை என்னும் கிராமத்தில் சோழமண்டல குள விவசாய வீதியில் தினமும் கனரக வாகனங்களால் மணல் ஏற்றிச் செல்லப்படுகிறது.

இதனால் விவசாய வீதிகள் குண்டும் குழியுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எங்களுடைய விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது நாம் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த வீதியை பயன்படுத்துகின்றனர். தற்போது மழை பெய்து வருவதால் அந்த வீதி மேலும் பாதிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ப-213)

# தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உதவிகள் சென்றடைகின்றன

### கிளி. மாவட்டச் செயலர் விளக்கம்

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகள் உரிய காலப்பகுதிக்குள் கிடைப்பதில்லை என்ற பச்சிலைப்பள்ளி தவிசாளரின் கருத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலர் மறுத்துள்ளார். இது தொடர்பில் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகசந்திப்பு ஒன்றின்போதே தவிசாளரின் குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

கடந்த 6ஆம் திகதி கிளிநொச்சி ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பச்சலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் "தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகள் உரிய காலப்பகுதியில் கிடைப்பதில்லை, தனிமைப்படுத்தல் காலப்பகுதி நிறைவுபெற்றதன் பின்னரே அந்த உதவிகள் சென்றடைகின்றன. இந்த நிலையில் எமது பிரதேச சபையால் அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறோம். மாவட்ட செயலகத்தின் இழுபறி நிலையே இதற்கு காரணம்" என்று தெரிவித்திருந்தார்.

சுரேனின் கருத்துத் தொடர்பில் தெரிவித்த மாவட்டச் செயலர், உதவிகள் உரிய காலப்பகுதியில் அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றன. தனிமைப்படுத்தப்பட்டவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. குறித்த விடயம் தொடர்பில் எமக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்தால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ப-113)

## க.பொ.த. உயர்தர பெறுபேறுகள்

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் 20 இடங்களுக்குள் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரங்கள் பின்வருமாறு

**மன. புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை**

**வர்த்தகப் பிரிவு**

செ.மேரி ஜெனிஸ்ரா 3ஏ (மாவட்ட ரீதியில் முதல் இடம்). மு.துவாராக்கா 2ஏபி (3 ஆவது இடம்). பா.குரோசினி 3ஏ (6 ஆவது இடம்), மு.அபிஷாலினி 2ஏபி (8 ஆவது இடம்), கி.அரோலின் 3ஏ (9 வது இடம்), பி.எழன் குசிக்கா 2ஏபி (12 ஆவது இடம்), ஜோ.அன்சிக்கா ஏ2பி (18 ஆவது இடம்)

**உயிரியல் பிரிவு**

செ.டல்மேடா செறின் 2ஏபி (02 வது இடம்). உ.அபிநயா ஏ2பி (07 வது இடம்), நி.அபிஷா ஏபிசி (16வது நிலை). போ. ஏன்ஜல் அர்த்மிக்கா 2பிசி (20 வது நிலை).

**கணிதப் பிரிவு**

அ.பிலிப்ஸ் ஷருணியா பி2சி (11 ஆவது இடம்). த.மினுஜா அலன்ரின் ஏ2சீ (12 ஆவது இடம்).(ஜ-60)

**யா/ மெதடிஸ் மகளிர் உயர் கல்லூரி**

**உயிரியல் விஞ்ஞானம்**

யோ.சாம்பவி 3 ஏ, து.ஜிரோசினி 2ஏபி, நிருசா பூபாலசிங்கம் 2ஏபி, பூ.கீதாஞ்சலி 2ஏபி, பு.அர்ச்சயா 2ஏ சி, ஆ.ஆதித்யா 3பி, பு.சுமித்தா ஏபிசி, ச.வித்தியா 2பிசி, நே.சர்மினி 2பிசி,ஜெ.யோதினி பீற்றர் 2பிசி.ரா.தரணி 2பிசி.அ.கோவிகா பி2சி,இ.சாகித்தியா பி2சி,ர. ரஸ்மினி 2பிசி.

**பௌதிகவியல் விஞ்ஞானம்**

கே.பவித்திரா 3ஏ, வ.துஷாராகா 2ஏபி, ர.லாவன்யா 2ஏசி, ஸ்ரீ.சரண்யா 2ஏசி.சி. சிவபிரியா ஏபிசி, தி.உதயதர்சனி ஏ2சி, ப.நதுஷிகா பி2சி.

**வர்த்தகப் பிரிவு**

செ.அபிராமி ஏ2பி.த.தாரினி 3ஏ, ப.தட்ஷாயினி 2ஏபி, கி.லூர்ஸ்கொன்சிகா 2ஏசி,கு.பிரசாந்தி 2பிசி,த.குகாயினி 2பிசி.

**உயிரியல் தொழில்நுட்பம்**

ர.யதுஷா 2பிசி, உ.எழில்நிலா 2பிசி, அ.யூடிற் டிலக்ஷ்னா பிசிஎஸ், க.ராகவி பி2சி.

**பொருளியல் தொழில்நுட்பம்**

ச.ஜனனி பிசிஎஸ்.

**கலைப் பிரிவு**

யோ.வைஷ்ணவி 3ஏ, செ.குலோஜனா 3ஏ, க.ஆர்த்திகா ஏ2பி, மு.திருத்தியா 2ஏபி.மு.விதுனா 2ஏசி, ஸ்ரீ.நவபாரதி 2ஏபி, ஈ.தனுசாலினி 2ஏபி, க.சுதர்மினி 2பிசி,த.வர்ஷனா ஏபிசி,சி.சிவரஞ்சினி ஏ2பி, ப.சுலக்ஷிகா ஏ2பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இராணுவ ஆட்சியும் இலங்கையின் சீரழிவும்

இலங்கை இராணுவ ஆட்சியால் விழுங்கப்பட்டு விட்டது. கொரோனாவும் அதற்கு வழிசமைத்துக் கொடுத்து விட்டது. கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளைப் போரிட்டு வீழ்த்தியவர்கள், கண்ணுக்குப் புலனாகாத எதிரிகளையும் வேட்டையாடுவார்கள் என்று நினைத்து கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு இராணுவத் தளபதியைப் பொறுப்பாக நியமித்தார் ஜனாதிபதியும், முன்னாள் இராணுவக் கட்டளை அதிகாரியுமான லெப்டினன் கேணல் நந்தசேன கோத்தாபய ராஜபக்ச.

அவலை நினைத்து உரலை இடித்த கதையாக, அந்த நியமனம் இப்போது நிர்வாகக் குழப்பங்களுக்கு வழியைத் திறந்து விட்டிருக்கின்றது. நிர்வாகக் குழப்பங்கள் மாத்திரமல்ல மக்களையும் திக்குமுக்காடச் செய்யவும் வைக்கின்றது. எவரது அறிவித்தலைக் கேட்பது? யார் சொல்வது சரி? என்ற குழப்பம் மக்களுக்கு மட்டுமல்ல ஊடகங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. மக்களை வழிகாட்ட வேண்டிய ஊடகங்களே குழம்பிப்போனால்?

இலங்கையின் சுகாதாரத்துறை, உலகின் வளர்ந்த நாடுகளுக்கு நிகரானது. மருத்துவத்துறையின் அர்ப்பணிப்பும், ஒழுங்கும் இதற்கு அடிப்படைக் காரணம். அப்படிப்பட்ட மருத்துவத்துறைசார் நிபுணர்களின் அறிவுரைகளை துளியும் கணக்கிலெடுக்காது இராணுவச் சிந்தனையுடன் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் சீத்துவக்கேடு இப்போது வெளிச்சத்துக்கு வருகின்றது. நாளொன்றுக்கு 200 தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலை மாறி 2000 தொற்றாளர்கள் கண்டறியப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இராணுவச் சிந்தனை மாற்றம் மட்டும் மாறவில்லை.

தொற்றாளர்கள் அதிகரிப்பால் 5 ஆயிரம் பேர் வரையில் வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் வெளிநாடுகளைப் போன்று தொற்று அறிகுறிகளை இனம்காட்டாதவர்கள் வீடுகளில் வைத்தே சிகிச்சையளிக்கப்படுவார்கள் என்று மருத்துவரும் இராஜாங்க அமைச்சருமான சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் பேராசிரியரும் இராஜாங்க அமைச்சருமான ஜயசுமன்ன ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா அதனை மறுதலித்துள்ளார். அவ்வாறானதொரு திட்டமே இல்லை என்று கூறியிருக்கின்றார். அரசின் இராஜாங்க அமைச்சர்கள் அதுவும் மருத்துவத்துறைசார் விற்பனர்களின் கருத்துக்களை மறுதலித்து இராணுவத் தளபதி கருத்து வெளியிட்டிருக்கின்றார். அவர் கூறியதற்கு அமைவாக வீடுகளில் தங்கவைத்து பராமரித்தல் என்பது நடைபெறவில்லை.

இதேபோன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் நேற்றுமுன்தினம் இரவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டிருந்தார். எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் அது நடைமுறையில் இருக்கும் என்று கூறியிருந்தார். நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் அது நடைமுறைக்கு வருகின்றது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இராணுவத் தளபதியோ மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடு நேற்று நள்ளிரவிலிருந்துதான் நடைமுறைக்கு வரும் என்று நேற்றுக் காலை கூறியிருந்தார். அவர் கூறியதைப்போன்று நேற்று நள்ளிரவிலிருந்துதான் அது நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது, கட்டுப்படுத்தப்படுகின்றது.

இங்கே ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரின் அறிவிப்புக்கூட செல்லாக்காசுதான். இராணுவத் தளபதி கூறுவதுதான் நடைபெறுகின்றது.

ஒருவகையில் இலங்கையில் இராணுவ ஆட்சி மலர்ந்து விட்டதைத்தான் இது எடுத்துக்காட்டுகின்றது.

இதற்குதானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா? என்பதைப் போன்று, இந்த நாட்டில் லெப்டினன் கேணல் நந்தசேன கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டுவந்து விட்டவர்களிடமும் அவருக்கு இப்போது முண்டு கொடுத்துக்கொண்டிருப்பவர்களிடமும், இதற்குதானே ஆசைப்பட்டீர்கள் என்று கேட்க வேண்டியுள்ளது இருக்கின்றது.




# ‘இனப்படுகொலை வாரம்’ தீர்மானத்தை நீக்குங்கள்

### கனேடியத் தூதுவரை நேரில் சந்தித்து எதிர்ப்பு வெளியிட்டார் தினேஸ் குணவர்த்தன

**கொழும்பு, மே 12**



**இலங்கைக்கு எதிராக, கனடா ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டவரைவை நீக்குவதற்கு, கனேடிய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தினார்.**

வெளிநாட்டு அமைச்சருக்கும், கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கின்னவுக்கும் இடையிலான சந்திப்பு வெளிநாட்டு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது தமிழ் ‘இனப்படுகொலைக் கல்வி வாரம்’ தொடர்பில் ஒன்ராறியோ சட்டமன்றில் கடந்த 6 ஆம் திகதி, தனிநபர் உறுப்பினர் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டமைக்கு அமைச்சர் கவலை தெரிவித்தார்.

இலங்கையில் இனப்படுகொலை நடந்திருக்கின்றமை கண்டறியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய கனடா அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டுக்கு முரணாக, இலங்கையில் இனப்படுகொலை நடந்திருப்பதை ஒன்ராறியோ சட்டமன்றம் கண்டறிந்துள்ளது என்று அமைச்சர் விளக்கினார்.

இந்தச் சட்டவரைவுக்கான ஆளுநரின் அரச அங்கீகாரத்தை நிறுத்துவதற்கு, கனேடிய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, நல்லிணக்கச் செயன்முறை, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் இருதரப்பு உறவுகளுக்கும் இந்தச் சட்ட வரைவு ஏற்படுத்தக்கூடிய தீங்குகள் தொடர்பில் விரிவாக விளக்கினார்.

பல முனைகளில் இலங்கைக்குத் தொடர்ந்தும் அளிக்கப்பட்ட ஆதரவுக்காக கனேடிய அரசுக்கு வெளிநாட்டு அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்தார். (எ-4)

## மயங்கி வீழ்ந்து முதியவர் சாவு

கொடிகாமம், மே 12


துவிச்சக்கரவண்டி ஒன்றில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை புங்குடுதீவு பூக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. செல்லையா காங்கேசு (வயது-66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், உயிரிழந்த முதியவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். (ப-159)

## இணைந்து செயற்படத் தயார்

### *சஜித்தை அழைக்கின்றார் நாமல்*

கொழும்பு,மே 12



நாட்டில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கு, ஆங்காங்கே கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்காமல், திட்டம் இருப்பின் வாருங்கள் இணைந்து செயற்படுவோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு, அமைச்சர் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

காலி மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது கொரோனாத் தொற்று. தேர்தல் அல்ல. தேர்தல் காலத்தில் நாங்கள் தேர்தலைச் செய்வோம். கொரோனாக் காலத்தில் மக்களைக் காப்பாற்றுவோம். நீங்கள் கூறுவதுபோல் திட்டம் இருந்தால், வாருங்கள் அமர்ந்து பேசி திட்டத்தை நடைமுறைப்படுத்த நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். இதில் எந்த பிரச்சினையும் எமக்கில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனத் தடுப்பூசிக்கு
# கோத்தா கோரியதால் அனுமதி வழங்கவில்லை
### உலக சுகாதார நிறுவனம் விளக்கம்

கொழும்பு, மே 12

உலக சுகாதார நிறுவனத்துடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கலந்துரையாடியதால் சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசிப் பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது. கடந்த 5 தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோத்தாபய, உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் சூம் தொழில்நுட்பத்தின் ஊடா கக் கலந்துரையாடியிருந்தார். அன்றைய தினம் மாலையில், சைனோஃபார்ம் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை உலக சுகாதார நிறுவனம் வழங்கியிருந்தது.

'உலக சுகாதார நிறுவனத்தின் தேசிய விதிமுறைகள் மற்றும் சட்டங்களின்படி, எந்தவொரு சுகாதார தயாரிப்புக்கும் அவசரகால பயன்பாட்டு அனுமதி வழங்குவதற்கான சுயாட்சி நாடுகளுக்கு உள்ளது' என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு அவசரகால பயன்பாட்டு அங்கீகாரங்கள் நாடுகளின் விருப்பப்படி வழங்கப்படுகின்றன என்றும் ஆனால் அவை உலக சுகாதார நிறுவனத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது. (ஒ.இ)

# புதுவருடக் கொத்தணி ஓரளவு கட்டுப்பாட்டிலாம்



கொழும்பு, மே 12

**புதுவருடக் கொத்தணி ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள ஆளும் கட்சியினான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரும் அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ், இதனால் நாட்டை முடக்கவேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.**

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையில் மிக முக்கிய அம்சமாக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி நிறுவனங்களின் உற்பத்திகள் தாமதமடைவதால் அவற்றை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலைமை நீடிக்கின்றது. கொரோனா கல்வித்துறையை பல்வேறு வழிகளில் பாதித்துள்ளது. மாணவர்களின் எதிர்காலம் மற்றும் சவால்களைக் கருத்தில் கொண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் சாதரண தரப் பரீட்சைகளின் காலங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன- என்றார். (ஒ.இ)

# எல்லாச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயார்
### சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 12

கொரோனாத் தொற்றுத் தொடர்பில் எந்தவொரு இடர் நிலைமையையும் எதிர்கொள்வதற்கு சுகாதாரத் திணைக்களம் தயாராகவே இருக்கிறது என அதன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் செப்ரெம்பர் மாதம் 21ஆயிரம் உயிரிழப்புக்கள் பதிவாகும் என்று அமெரிக்க பல்கலைக்கழக கணிப்பு வெளியாகியிருந்தது. இது தொடர்பில் ஊடகங்களின் கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தாலும் அவர்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய வசதிகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்படும். புதிதாகத் தொற்றாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும்' - என்றார். (ஒ.இ)



# கர்ப்பிணிக்கு தொற்றெனில் குழந்தையையும் பாதிக்கும்
### மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, மே 12

கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால், அவர் பிரசவிக்கும் குழந்தைக்கும் தொற்று ஏற்படக் கூடும். அத்துடன் கர்ப்பிணிகள் உள்ள குடும்பத்தினரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னரை விட தற்போது சிறுவர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் அதிகளவில் கொரோனாத் தொற்று ஏற்படுகின்றது. கர்ப்பிணிகளுக்குத் தொற்று ஏற்படும் போது, அவர்களுக்கு பாதிப்பு தீவிரமடைவதோடு, பிரசவத்திலும் சிக்கல் ஏற்படும். தொற்றுக்குள்ளான கர்ப்பிணியொருவர் பிரசவிக்கும் குழந்தைக்கும் தொற்று ஏற்படக் கூடும்.

எனவே கர்ப்பிணிகளுக்கு ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் விரைவாக மருத்துவமனைகளுக்குச் சென்று பரிசோதனைகளை முன்னெடுத்து தமக்கு தொற்று ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதேவேளை கர்ப்பிணிகள் உள்ள வீடுகளில் வசிக்கும் ஏனையோரும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலைமையில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் ஊடாக நபரொருவர் தான் வசிக்கும் பிரதேசத்திலிருந்து பிறிதொரு இடத்துக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றோம். எனவே சட்டங்களை நடைமுறைப்படுத்தி சகல பிரதேசங்களையும் முடக்குவதை விட, ஒவ்வொருவரும் உணர்ந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே பொருத்தமானது.

அதேவேளை கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் திட்டமிடலுடன் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எந்தவொரு தடுப்பூசியும் காலாவதியாகவில்லை. எனவே மக்கள் அனைவரும் அச்சமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். என்றார். (எ-4)

# கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கையில் உற்பத்தி
### அரச மருத்துவ கழகம் தெரிவிப்பு

கொழும்பு, மே 12

கொரோனாத் தடுப்பூசிகளை இலங்கையில் உற்பத்தி செய்யும் பணியைத் தொடங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அரச மருத்துவக் கழகத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரஷ்ய ஸ்புட்னிக் தடுப்பூசி மற்றும் சைனோஃபார்ம் தடுப்பூசிகளை நாட்டில் உற்பத்தி செய்வது தொடர்பில் இரு நாட்டுத் தூதுவர்களுடன் பேச்சு நடந்து வருகிறது.

கொரோனாத் தடுப்பூசி உற்பத்தியாளர்கள் தங்கள் தொழில்நுட்ப அறிவை அரச மருத்துவ நிறுவனங்களுக்கு வழங்கி, இலங்கையில் முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ப)




# 26,010 பேருக்கு சீனத் தடுப்பூசி

கொழும்பு, மே 12

இலங்கையில் இதுவரை 25 ஆயிரத்து 910 பேருக்கு சைனோஃபோம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைவாக 20 ஆயிரத்து 710 இலங்கையர்களுக்கும், சீனப் பிரஜைகள் 5 ஆயிரத்து 300 பேருக்கும் இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# கம்பஹா மாவட்டத்தில் அதிக தொற்றாளர்கள்

கொழும்பு,மே 12

கம்பஹா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக கம்பஹா மாவட்டத்தில் 551 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை களுத்துறை மாவட்டத்தில் 362 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 321 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ-4)

# மே மாதத்தில் இதுவரை 20,384 பேருக்கு தொற்று

கொழும்பு,மே 12

நாட்டில் இந்த மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிவரையான காலப்பகுதியில் 20 ஆயிரத்து 384 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை

வலி.தென்மேற்கு, மே 12

பூநகரி சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் ஏ 32 முதன்மை வீதியில் உள்ள ஓய்வுப் பகுதியில் பிரமாண்டமான அழகிய பிள்ளையார் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இருபுறமும் கடல் சூழ்ந்த ரம்மியமான சூழலில் ஏறத்தாழ 10 அடி உயரமான பிள்ளையார் சிலை திடீர் என தோன்றியுள்ளதால் அப் பிரதேச மக்களையும், யாழ்பாணம் மன்னார் பிரதான வீதியில் பயணிக்கும் மக்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. மேற்குப் பக்கமாக வீதியைப் பார்த்தவாறு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இப் பிள்ளையார் சிலை கருங்கல்லிலா லான உறுதியான அடித்தளத்தைக் கொண்டுள்ளதுடன், நேர்த்தியாக வண்ணம் பூசப்பட்டு கண்ணைக் கவரும் விதத்தில் அழகாகவும் காணப்படுகிறது.

வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ள இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் தமது வாகனத்தை நிறுத்தி திடிரெனத் தோன்றியுள்ள பிள்ளையாரை பக்தியுடன் வணங்கிச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (ஐ-115)





## 'மாஸ்க்' அணியாதோருக்கு எதிராக படையினர், பொலிஸார் நடவடிக்கை

வவுனியா, மே 12

வவுனியா நகரில் முகக்கவசம் அணியாது பயணித்தவர்களுக்கு எதிராக இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன் போது 28 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதியூடாக முகக்கவசம் அணியாது பயணித்தவர்கள் மற்றும் முகக்கவசத்தை சீராக அணியாது பயணித்தவர்கள் ஆகியோரை வழிமறித்து அவர்களுக்கு கடும் எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டன.

அத்துடன், பழைய பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகள் பஸ்களும் வழிமறித்து சோதனையிடப்பட்டன. பஸ்களில் முகக் கவசத்தை சீராக அணியாதவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு நேற்று 28 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன. (ப-18)

## சாவ.இந்து மயானத்துக்கு மேலும் ஒரு எரிகொட்டகை

சாவகச்சேரி,மே 12

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் மேலும் ஒரு எரிகொட்டகை அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மயானத்தில் ஏற்கனவே ஒரே தடவையில் மூன்று சடலங்கள் தகனம் செய்யக்கூடிய இடவசதியுடன் எரிகொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

சிலவேளைகளில் மூன்றுக்கு மேற்பட்ட சடலங்கள் வரும் பட்சத்தில் நான்காவது சடலம் கொட்டகைக்கு வெளியே வைத்து தகனம் செய்யும் நிலை காணப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு சபையின் தவிசாளர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற அமர்வில் முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

இதனை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதால் சபை நிதியில் எரிகொட்டகை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இருக்கும் எரிகொட்டகையை விட சற்று பெரிதாக இக்கொட்டகை அமைக்கப்படவுள்ளதால் வருங்காலத்தில் ஒரே நாளில் எட்டு சடலங்களை தகனம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வவுனியாவில் கடும் மழை நீரில் மூழ்கிய குடியிருப்புக்கள்

வவுனியா,மே 12

வவுனியாவில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக கணேசபுரம் பிரதேசத்தின் கருமாரி அம்மன் வீதியின் இரு மருங்கிலும் உள்ள குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

குறித்த பகுதியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. வெள்ளம் குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் மக்கள் பல வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது அத்தியாவசிய தேவைகளை முன்னெடுத்தனர். குறித்த பகுதியில் வீதிக்கு இரு மருங்கிலும் கழிவு வாய்க்கால் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், பிரதானமாக நீர் வரத்துள்ள பகுதியில் பாலம் ஒன்றும் அமைக்கப்பட்டால் குடியிருப்புக்குள் வரும் வெள்ளநீரை தடுப்பதற்கு ஏதுவாக அமையும் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-222)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தனி ஒருவன்'களின் உதவி





இந்தியாவில் ஒக்சிசனுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், அதை இலவசமாக வழங்கும் தன் சேவையை தொடர, ஆசையாய் வாங்கிய சொகுசு காரை விற்றுள்ளார், மும்பையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர். மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தனது சொகுசு காரை விற்று அதன்மூலம் கிடைத்த பணத்தில் உதவி செய்து வருகிறார்.

இவரின் இந்தச் செயற்பாட்டை பாராட்டி சமூக வலைத் தளங்களில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

# கோயிலுக்குள் தேரல்ல தேரே கோயிலானது!



ஒடிசா மாநிலம், புவனேஷ்வரில் இருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் கொனார்க் அமைந்துள்ளது. இங்கு 12ஆம் நூற்றாண்டில் நரசிம்ம தேவர் என்ற மன்னனால் கட்டப்பட்ட சூரிய கோயில் உள்ளது. இது பார்ப்பதற்கு தேரைப் போலவே கலைநயம் மிக்க சக்கரங்களைக் கொண்டதாகக் காட்சியளிக்கிறது. இந்தியாவில் சூரியக் கடவுளுக்காகக் கட்டப்பட்டு எஞ்சியுள்ள கோயில் இது மட்டுமே.



இந்தக் கோயில் சிவப்பு மணற்பாறை கற்களால் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் உள்ள பெரும்பாலான கற்கள் அனைத்தும் நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்களைக் கொண்டுள்ளன. தேர் போன்ற கோயிலின் சக்கரம் முழுவதும் சிற்பங்களாகவே வடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கோயில் யுனெஸ்கோ சார்பில் உலக பண்பாட்டுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலின் சிற்பக் கலையைப் பார்வையிட லட்சக்கணக்கான மக்கள் அங்கு செல்கின்றனராம். ஆனால் கொரோனாப் பெருந்தொற்று காரணமாக இந்திய சுற்றுலாத் தலங்கள் முடங்கிப்போயுள்ள நிலையில் இந்தக் கோயிலின் பரா மரிப்புத் தொடர்பில் தற்போது சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றதாம்.

# கொரோனா பாதிப்பால் நடிகர் ஜோக்கர் துளசி மரணம்





கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பழம்பெரும் நடிகர் ஜோக்கர் துளசி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை தமிழகத்தில் வேகமாக பரவி வருகிறது. இதில் திரையுலக பிரபலங்களும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், தற்போது நடிகர் ஜோக்கர் துளசி கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

மருதுபாண்டி, உடன்பிறப்பு, தமிழச்சி, இளைஞரணி, அவதார புருஷன் போன்ற படங்களில் நடித்துள்ள இவர், சின்னத் திரையிலும் கோலங்கள், வாணி ராணி, கேளடி கண்மணி உள்ளிட்ட சீரியல்களில் நடித்துள்ளார். அவரது மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | | | 2 | 5 |
| | 7 | 1 | | 6 | 5 | | | |
| | | 3 | | | 8 | | | |
| | 8 | | | 9 | 4 | | 1 | 2 |
| | | | | 5 | | | | |
| 9 | 5 | | 7 | 8 | | | 4 | |
| | | | 8 | | | 7 | | |
| | | | | 3 | | 2 | 9 | |
| 6 | 9 | | | | | | 3 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 8 | 4 | 9 | 3 | 5 | 2 |
| 5 | 2 | 4 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 3 | 8 | 9 | 6 | 5 | 2 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 2 | 7 | 8 | 6 | 5 | 3 | 4 |
| 8 | 7 | 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 3 | 1 | 8 | 2 | 7 |
| 9 | 5 | 1 | 4 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 2 | 3 | 8 | 1 | 6 | 5 | 4 | 7 | 9 |
| 7 | 4 | 6 | 2 | 9 | 3 | 1 | 8 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

# இன்றைய நாள்



**மேடம்:** எதையும் கவனத்துடன் கையாளுங்கள். அதிகப் பேச்சு வேண்டாம். தனித்திறன் வெளிப்படும். அறிவுப் பூர்வமாக செயல்படுவீர்கள். அலுவலக பிரச்சினைகள் தீரும்.

**இடபம்:** புதிய வீடு, நிலம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். உங்கள் முன்யோசனை வாழ்வில் முன்னேறத் துணை செய்யும். அறிவுத்திறன் வெளிப்படும்.

**மிதுனம்:** தாய், உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விலகியிருந்த நண்பர்கள் வலிய வந்து உதவி கேட்பர்.

**கடகம்:** சகோதரர்களுடன் இருந்த கருத்து மோதல்கள் நீங்கும். அதிக முயற்சியுடன் செயல்கள் முடியும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப விஷயங்களில் கவனம் தேவை. மனம் தளர வேண்டாம்..

**சிம்மம்:** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உற்சாகம் பெருகும். தவறான விடங்களில் ஈடுபட வேண்டாம். மாலையில் நன்மை நிகழும். எதையும் சமாளித்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த கடன் கைக்கு வரும். உங்களின் செல்வாக்கு கூடும். விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்டிருந்த கவலை தீரும்.

**துலாம்:** பணியில் உங்களது திறமையை நிரூபிப்பீர்கள். பிறரிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டாம். புதுத்துறையில் ஈடுபாடு வந்து அதைக் கற்றுத் தேர்வீர்கள்.

**விருச்சிகம் :** வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் அதை சமாளிப்பீர்கள். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி சிரமங்களை வெல்வீர்கள். சிறு தடைகளை எளிதாகக் கடப்பீர்கள்.

**தனுசு:** நன்கு முயன்று மேலதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். அலுவலகப் பணியில் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்பட்டு அதிகம் பேச வேண்டாம்.

**மகரம்:** அலுவலகப் பணியில் நன்கு கவனம் செலுத்துவீர்கள். முயற்சியால் எண்ணம் நிறைவேறும். சுபச்செய்தி ஒன்று வரும். நேர்மையற்ற நண்பர்களை கருணையின்றி விலக்குங்கள்.

**கும்பம்:** முன்னேற்றத்துக்கு உறவினர் முட்டுக்கட்டை போடக்கூடும். இன்று எதிர்பாராத இடத்திலிருந்து திடீர் வரவு உண்டு. மனதுக்கு நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்வர்.

**மீனம்:** பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்படி செயற்படுவீர்கள். பெற்றோரின் ஆரோக்கியம் முன்பைவிட நிம்மதியளிக்கும். : எதைச் செய்வதற்கும் முன்பும் சிந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோணாத் தொற்று நிலைமை மன்னாரில் மோசமடையலாம்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

**மன்னார்,மே 12**

**எதிர்வரும் நாள்களில் மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை மோசமடையலாம். எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இருக்கமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது என மன்னார் சுகாதார திணைக்களத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

அதனடிப்படையில் மன்னார் மக்கள் சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாக கடைப்பிடிப்பதனூடாக மன்னார் மாவட்டத்தில் கொரோனா பரம்பலை இல்லாமல் செய்ய முடியும்.

எனவே மக்கள் தேவையில்லாமல் ஒன்றுகூடுவதையும் பொதுப் போக்குவரத்துக்களை பயன்படுத்துவதையும் தவிர்த்து சுய கட்டுப்பாடுகளுடன் இருந்தால் மாத்திரமே மன்னார் மாவட்டத்திலுள்ள அனைவரும் பாதுகாப்பாக இருக்க முடியும்.

இந்தத் தொற்றுநோயின் தாக்கத்தை இல்லாமல் செய்வதும் அல்லது தொடர்ச்சியாக இவ்வாறான அபாயகரமான சூழல்களை நாம் சந்திப்பதும் எமது மக்களின் நடைமுறையில் தான் தங்கியுள்ளது

எனவே பெரியளவில் ஒரு விளைவுகள் ஏற்படுவதற்கு முன்பாக மக்களாகிய நாம் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும் - என்றார். (ஜ-213)

# நானாட்டான் பிரதேசத்தில் உப பொலிஸ் நிலையம்

மன்னார், மே 12

நானாட்டான் பிரதேசத்தில் உப பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் முருங்கன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நானாட்டான் பஜார் பகுதியை மையப்படுத்தி இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காகவும், கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளை மக்களை பின்பற்றச் செய்வதற்காகவும் உப பொலிஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேசத்துக்குரிய முருங்கன் மற்றும் வங்காலை பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு இருந்தாலும் பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் கடைத் தொகுதிகள் உள்ளிட்ட முக்கிய நிர்வாக மையங்கள் இவ்விடத்தில் இருப்பதால் பொலிஸ் நிலையத்தின் தேவை கருதி இந்த உப பொலிஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக அனுமதியை முருங்கன் பொலிஸார் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றில் பெற்றுள்ளனர்.

இருப்பினும் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்குரிய காணி மற்றும் கட்டட வசதி இல்லாமையால் இந்த நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது என முருங்கன் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-213)

# சட்டவிரோதமாக மருத்துவ சிகிச்சை


*பருத்தித்துறையில் சுற்றிவளைப்பு*

பருத்தித்துறை, மே 12

மேலைத்தேய மருத்துவ சிகிச்சையை சட்டவிரோதமாக வழங்குகின்றது என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையில் வைத்திய நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு மேலைத்தேய மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரப் பகுதியில் ஆயுள்வேத சிகிச்சை என்ற போர்வையில் குறித்த நிலையம் இயங்கியது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மாவட்ட உணவு மருந்து பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பருத்தித்துறை பொலிஸார் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர். குறித்த நிலையம் அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றியும் மேலைத்தேய மருத்துவ சான்றுபெற்ற மருத்துவர் எவரும் இல்லாத நிலையிலும் காணப்பட்டது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பரிசோதனை நடவடிக்கைகளில், குறித்த நிலையத்தில் சிகிச்சையளித்துக் கொண்டிருந்த ஒருவர் பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்து தலைமறைவானார் என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த மருத்துவ நிலையம் கடந்த வாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கொவிட் கட்டுப்பாட்டு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதும் இந்த நிலை காணப்பட்டு சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஜ-9)





# கந்தர்மடத்தில் சுகாதாரச் சீர்கேடு நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12

யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து அரசடி அம்மன் வீதிக்கு ஊடாக வீரகாளி அம்மன் குளத்தைச் சென்றடைகின்ற வாய்க்காலில் பிளாஸ்ரிக் பொருள் கள் , குப்பை கூளங்கள் நிறைந்து காணப்படுகின்றன என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில், கடந்த மார்கழி மாதம் பெய்த பெரும் மழையின் காரணமாக அந்தக் குளத்தில் காணப்பட்ட மேற்படி பிளாஸ்ரிக் பொருள்கள் அந்த வாய்க்காலுக்குள் புகுந்திருந்தன . இதன் காரணமாக இப்பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகமாகி பல சிறுவர்கள் டெங்கு நோய் தொற்றுக்குள்ளாகியிருந்தனர் .

இது தொடர்பாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணனின் நிர்வா கத்தினருக்கு பல தடவைகள் நேரடியாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்கியிருந்தபோதிலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து விசிறும் செயற்பாடுகளையேனும் இதுவரை காலமும் மாநகர சபையினர் முன்னெடுத்திருக்கவில்லை எனவே யாழ்ப்பாணம், மாநகர சபை இது தொடர்பில் உரிய கவனம் எடுக்கவேண்டும் - என்றனர். (ப)

# ஏனைய பிரதேச வெதுப்பக உற்பத்திகளுக்குத் தடை!

*சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவிப்பு*



சாவகச்சேரி, மே 12

ஏனைய பிரதேச செயலக பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் வெதுப்பகப் பொருள்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பொருள்களை நடமாடும் வாகனங்களில் கொண்டு வந்து தென்மராட்சி பிரதேசத்தின் விற்பனை செய்வது சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உள்ள வெதுப்பக உரிமையாளருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையிலும் ஏனைய பிரதேசங்களில் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாலும் நடமாடும் வெதுப்பக உற்பத்திப் பொருள்கள் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி ஏனைய பிரதேசங்களிலிருந்து உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் நடமாடும் வாகனங்கள் சுகாதாரப் பிரிவினரால் தடுத்து வைக்கப்படுவதுடன் வாகனத்தைக் கொண்டு வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். (ப-9)

# கருவேல மரங்களை அழிக்க தொண்டு நிறுவனம் ஏற்பாடு



மன்னார்,மே 12

மன்னார் மாவட்டத்தில் பரவலாக வளர்ந்துள்ள கருவேல முள்ளு மரங்களை அழிப்பதற்கு தொண்டு நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இவ்வாறு பரந்து வளர்ந்து காணப்படும் கருவேல மரங்கள் மாவட்டத்தில் வறட்சியை ஏற்படுத்துவதோடு, பயன்தரும் நல்ல இன மூலிகைகள் மற்றும் மரங்களின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றன. இந்த நிலையில் குறித்த கருவேல மரங்களை அழித்து மன்னார் மாவட்டத்தை வளம் மிக்க மாவட்டமாக மாற்ற லக்ஷ்மி கரங்கள் தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது. (ஜ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்துக்கான அனுமதி வழங்காவிட்டால் போராட்டம்

## புதுஐயங்குளம் விவசாயிகள் தெரிவிப்பு

**கிளிநொச்சி, மே 12**

**உணவுக்கும், விதை நெல்லுக்கும் சிறுபோகம் விதைப்பதற்கு அனுமதி வழங்காப்படாவிடின் அரச அதிகாரிகளுக்கு எதிராக போராட்டத்தில் குதிப்போம் என்று புதுஐயங்குளம் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி ஊடக மையத்தில் விவசாயிகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

புதிய ஐயங்குளத்தில் 35 வருடங்களுக்கு மேலாக நாங்கள் விவசாயம் செய்து வருகின்றோம். அந்தப் பகுதியில் நீர்பாசனத்துக்காக அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் மூடப்பட்டு புதிய வாய்க்கால்களை எமது காணிகளை ஊடறுத்து அமைக்க தற்போது முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஏற்கனவே இருந்த வாய்க்கால்கள் அனைத்தையும் மண் போட்டு மூடி, அவ்வாறானதொரு இடமே இல்லை என்பது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்.

புதிய வாய்க்கால் அமைப்பதற்கு அனுமதித்தால்தான் சிறுபோகத்துக்கு நீர் தருவோம் என கூறினர். நாம் ஏற்கனவே இருந்த வாய்க்கால்கள் மூலம் சிறுபோகத்துக்கு நீரைப் பாய்ச்ச முடியும் என தெரிவித்தோம். ஆனால் இன்று சிறுபோக செய்கையை கமக்கார அமைப்பினரே மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளருக்கு அறிவித்தோம். அவர்கள் வந்து பார்வையிட்டு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் எவ்வாறு வீதி மற்றும் வாய்க்கால்கள் இருந்ததோ அதே போன்று அமைக்கக் கூறினார். அதனை கண்டும் காணாமல் விட்டுள்ளனர். ஒரு ஏக்கர் காணியில் இரு பக்கமும் வீதிக்கு எடுத்துக்கொண்டால் நாம் எவ்வாறு விவசாயம் செய்வது?

உணவுக்கு எங்களிடம் நெல் இல்லை. விதைப்பதற்கு நெல்லை வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை. ஒரு ஏக்கர் காணியில் மேற்கொள்ளப்படும் செய்கையில் நாங்கள் எவ்வாறு ஜீவிப்பது? அதிகாரிகள் அனைவரும் இதற்கு நல்லதொரு முடிவு எடுக்காவிடின் நாங்கள் அதிகாரிகளுக்கு எதிராக வீதியில் இறங்கி போராடும் நிலைக்கு தள்ளப்படுவோம் - என்றனர். (ஐ-6)

# 'மாஸ்க்' இன்றி நடமாடியோருக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரி நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாமல் நடமாடிய பலர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சாவகச்சேரி நகரப் பகுதி மற்றும் சந்தை ஆகிய இடங்களில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர், படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது முகக்கவசமின்றி நடமாடிய வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், நுகர்வோர் மற்றும் ஓய்வூதியம் பெற வந்தோர் எனப் பலரும் முகக்கவசம் இன்றிக் காணப்பட்டனர்.

இதனையடுத்து இவர்களை சாவகச்சேரி பொலிஸ்நிலைய பஸ்ஸில் ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டு வழக்குகள், பதிவுசெய்த பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ-9)




## யாழ். செஞ்சிலுவை சங்கத்தால் மாணவர்களுக்கு உதவித்திட்டம்

கொடிகாமம், மே 12

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தால் மாணவர்கள் இருவருக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்.செஞ்சிலுவைச் சங்க கிளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய, கல்வியில் முன்னிலையில் உள்ள இரு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் வங்கிக் கணக்கில் மாதாந்தம் தலா 2 ஆயிரம்500 ஆயிரம் ரூபா தொடர்ந்து ஒரு வருடத்துக்கு வைப்பிலிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# வட்டுவாகல் பாலத்தை சீரமைக்க கோரிக்கை!

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு பரந்தன் முதன்மை வீதியில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலத்தை சீரமைத்து தர வேண்டும் என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் மீனவர்கள் வீச்சுவலை வீசி மீன்பிடித்து வருகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

2010ஆம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் அ.மரியராசாவால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் திட்டமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. நந்திக் கடல் துப்புரவாக்குதல், வட்டுவாகல் பாலத்தை சீரமைத்தல் அல்லது புதிதாக அமைத்தல் என்பவை அத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் இவ்வேலைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட செயலகக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டன. தற்போதுள்ள வட்டுவாகல் பாலத்தை சீரமைக்காமல் வற்றாப்பளை பக்கமாக புதிய பாலத்தை அமைப்பது தொடர்பாக முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் பத்தாண்டுகள் கடந்த நிலையிலும் நந்திக் கடல் துப்புரவுப் பணிகளோ வட்டுவாகல் பாலச் சீரமைப்புக்களோ இடம்பெறவில்லை.

வட்டுவாகல் பாலத்தில் பல இடங்களில் வெடிப்புகள் காணப்படுகின்றன. வட்டுவாகல் பாலம் மழை காலங்களில் ஆபத்து மிகுந்த இடமாக காணப்படுகின்றது. முத்தையன்கட்டு குளம் உட்பட பல ஆற்றுப்படுகைகளில் இருந்து வருகின்ற கூடுதலான மழை வெள்ளம் வட்டுவாகல் பாலத்தை ஆண்டுதோறும் மூடிப் பாய்கின்ற நிலையில், வட்டுவாகல் பாலத்தை சீரமைக்க வேண்டும் அல்லது புதிய பாலம் அமைக்க வேண்டும். இதற்கான முயற்சிகளை கடற்றொழில் அமைச்சர் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்-என்றனர். (ஐ-13)

# சில எம்.பிக்களின் குரோதமே இனமுரண்பாட்டுக்கு காரணம்

## கலையரசன் எம்.பி. குற்றஞ்சாட்டு

மட்டக்களப்பு, மே 12

முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரீஸை போன்றவர்களின் குரோத பார்வையே இன முரண்பாடுகளுக்கு காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ வேண்டும் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது.

ஆனால் சிறுபான்மைச் சமூகமாக இருக்கின்ற முஸ்லிம் அரசியலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தமிழர்களுடைய பூர்வீக பிரதேசங்களை கபளீகரம் செய்கின்ற விடயம் நீண்டகாலமாக அரங்கேறி வருகின்றது. அந்த முன்னெடுப்பின் அங்கமாகவே கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் குறைப்பு விடயத்தைப் பார்க்கின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் கடந்த 33 வருடங்களாக தனியான செயலகம் போன்று இயங்கி வருகிறது. அவ்வாறான வேளையில் முஸ்லிம் அரசியலாளர்கள் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காக தமிழர் பிரதேசங்களை கூறுபோட்டு கபளீகரம் செய்ய முற்படுகின்றனர். நிச்சயமாக இவ்வாறான செயற்பாடுகள் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்திலே தமிழ் முஸ்லிம் உறவில் பாரிய ஒரு விரி

# வருமானத்தை விட கடனே அதிகரிப்பு

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 12

தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் மிக மோசமான அளவில் வீழ்ச்சிய டைந்துள்ளது. வருமானத்தை விட, அரசு பெறும் கடன் அளவு அதிகரித்துள் ளது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அநாவசியமாக வரிகளை விலக்குவதற்கு அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளே இதற்குக் காரணம்.

அரசால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார முன்னெடுப்புக்கள் தவறா [illegible] என்பது இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. இந்த அரசு நாட்டை



கடன்பொறிக்குள் சிக்க வைத்துள்ளது. இன்று மணித்தியாலத்துக்கு 25 கோடி ரூபா கடன் பெறும் நிலையே காணப்படுகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம் 454 பில்லியன் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன [illegible] வும் அவர் [illegible] தெரிவித்தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை பெய்தாலும் வாட்டுகிறது வறட்சி

## வடக்கு, கிழக்கில் 11,882 பேர் பாதிப்பு

**கொழும்பு, மே 12**

**நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவுகின்ற போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டு மாதகாலமாக வறட்சி நிலை காணப்படுகிறது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த நிலையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் மேலும் உள்ளதாவது;

வறட்சியால் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 43 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு தேவையான குடிதண்ணீரை, தண்ணீர்த் தாங்கி ஊர்திகள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை நாட்டில் ஏனைய சில மாகாணங்களில் தொடர்ந்து நிலவிவரும் மழையுடனான காலநிலை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். தொடர் மழையால் ஆங்காங்கு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் பலத்த காற்று ஆகியவை காரணமாக 393 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 583 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளது. (ப)

# சிறுபோகச் செய்கை காலத்தில் வான்பாயும் கட்டுக்கரைக் குளம்

*பிராந்திய நீர்பாசன பணிப்பாளர் தகவல்*

மன்னார், மே 12

மன்னார் பகுதியில் கடந்த சில தினங்களாக பரவலாகப் பெய்துவரும் மழை காரணமாகவும், மல்வத்தோயா நீர் வருகையின் காரணமாகவும் மன்னாரின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக் குளத்தில் சிறுபோக நெற்செய்கை காலத்தில் 12 வருடங்களுக்குப் பின் தற்பொழுது நீர் வான்பாயத் தொடங்கியுள்ளது என்று மன்னார், வவுனியா பிராந்திய நீர்பாசனப் பணிப்பாளர் நடராஜா யோகராஜா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காலபோகத்தை தொடர்ந்து ஒவ்வொரு நடப்பாண்டிலும், கட்டுக்கரைக் குளத்திலுள்ள நீர் அளவைக் கொண்டே சிறுபோகம் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் மேற்கொள்வது வழமையாகும். இதற்கமைவாக நடப்பாண்டில் கட்டுக்கரைக் குளத்திலிருந்த நீர்மட்டத்தை வைத்துக்கொண்டு இவ்வருடம் 2ஆயிரத்து 578 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை செய்வது எனவும். 400 ஏக்கரில் மேட்டுப் பயிர் செய்வது எனவும் மாவட்டச்செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதாவது கட்டுக்கரைக் குளத்திலிருந்த நீரின் அளவைக் கொண்டும், மழையை எதிர்பார்த்துமே நெற்செய்கை பற்றி தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 12 வருடங்களுக்கு பின்னர் மன்னார் கட்டுக்கரைக் குளம் சிறுபோக நெற்செய்கை காலத்தில் வான் பாய்வது இதுவே முதல் தடவையாகும்.

அந்த நீர் வீணாக வெளியேறுகின்றது. தற்பொழுது நெற்செய்கையை விஸ்தரிக்க முடியாத நிலை உள்ளது. மாதக் கடைசியில் பெய்ய வேண்டிய மழை இம்முறை முற்கூட்டியே பெய்யத் தொடங்கியதால் மாத இறுதியில் மழை பெய்யாது விடுமோ என்ற சந்தேகமும் காணப்படுகின்றது. எனினும் 3 ஆயிரம் ஏக்கரில் இம்முறை நெற்செய்கை பண்ணப்படலாம் என்றார். (ப-60)



கொரோனாத் தொற்றில் இருந்து தற்காத்துக்கொள்ளும் முகமாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நீராவி பிடிக்கக்கூடிய பொறிமுறையொன்று கரைச்சி பிரதேச சபையின் வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ப-12)


**விற்பனைக்கு**

GV இலக்கமுடைய CD 125 Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

**077 447 1122**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள

- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.

தொடர்பு:076 316 5734, 077 985 1946

e.mail: jenoshanark@gmail.com


## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 10 |
| 03 | 05 |
| 1932 | 2021 |



## திரு தில்லையம்பலம் மார்க்கண்டு

**இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்– நீர்ப்பாசன திணைக்களம்**

யாழ். காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் மார்க்கண்டு அவர்கள் 10-05-2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.அன்னார், காலஞ்சென்ற தில்லையம்பலம், சிவகாமிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம், பார்வதிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும்.சிவபாக்கியம் அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்ற Dr.யமுனா, மனோகரி(இலங்கை), மாலினி (UK), கேதீஸ்வரி (சாந்தி- UK), யாழினி (CANADA) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன், சுகந்தன், சயந்தன், திலகேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம், பார்வதி, லக்சுமி, சரஸ்வதி மற்றும் பொன்னுத்துரை(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்.காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இந்திராதேவி மற்றும் கமலாதேவி, சோமசுந்தரம், மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசிகரன்- பிறிஷ்னி, ஆரணி, ஹரிணி, கிரிஷான், அக்ஷாயினி, யாதவன் ஆகியோரின் ஆருயிர் பேரனும் ஆவார். அன்னாரின் அமரருடல் 12.05.2021 புதன்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.000 மணி வரை கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் 13-05-2021 வியாழக்கிழமை அன்று 10:00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**Tel: +94112505713**

**தகவல்: குடும்பத்தினர் No.16, 4/4 1st Chapel Lane, Colombo - 05**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 13.04.2021 செவ்வாய்க்கிழமை

அன்று இறைபதம் அடைந்த எமது அன்பு அன்னை

## அமரர் திருமதி தவமணி கனகசபை

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் லண்டனில் நாளை (13.05.2021) வியாழக்கிழமை நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், வேறு வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களிற்கும், இறுதிச்சடங்கு நடைபெற்ற 21.04.2021 அன்று அவரின் பிறந்த இடமான எழுதுமட்டுவாழில் ஓர் அஞ்சலி நிகழ்வை ஒழுங்கு செய்தவர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகளை அச்சிட்டு வழங்கியவர்களிற்கும் அவரின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தும் மலர்தூவியும் அஞ்சலி செய்த அனைத்து உள்ளங்களிற்கும் அவரை நினைவுகூர்ந்து இரங்கலுரை ஆற்றியவர்களிற்கும், வேறுவழிகளில் உதவியவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (13.05.2021) வியாழக்கிழமை அன்னாரின் நினைவாக எழுதுமட்டுவாழ் பெரியகேணிப் பிள்ளையார் ஆலயத்தில் ஒழுங்கு செய் யப்பட்ட பூசை வழிபாடும் மதியபோசன நிகழ்வும் **இன்றைய கோவிட் - 19 நிலையைக் கருத்திற்கொண்டு நிறுத்தப்பட்டுள்ளதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**தகவல்:**

**ந.பாலகிருஸ்ணன்**

**தங்கள் அனைவருக்கும் நன்றி கூறும்**

**பிள்ளைகள், மருமக்கள்,**

**பேரப்பிள்ளைகளும், உறவினர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் நெறிபிறழ்வில்லா



# வாழ்வின் கதம்பம்

O உடுவிலூர் கலா

மனித உயிர்கள் மகிழ்வுடன் வாழ்கின்ற உயிரியற்கூடம், குடும்பம், தர்மம், பண்பாடு, பாரம்பரியம், அறம், தியாகம், பாசம் மற்றும் அரவணைப்பு போன்ற நல்லனவெல்லாம் இங்கு விழுதெறிகின்றன. ஆணும், பெண்ணும் இணைந்து குடும்பக் கட்டமைப்பை உருவாக்குகின்றனர். மழலைச் செல்வங்கள் பிறந்து குடும்பத்துக்கு மேலும் வலுச் சேர்க்கின்றனர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் குடும்பம் முக்கியமானது. குடும்ப அமைப்பிலேயே மனிதன் பூரணத்துவம் அடைகின்றான். *'மனிதம்'* இங்கு செதுக்கிச் செப்பனிடுகிறது. குடும்பங்கள் சமூகத்தை நோக்கிப் பயணிக்கின்றன. குடும்பங்களின் நிலைகளைப் பொறுத்தே சமூகம் தரமுயர்த்தப்படுகிறது. சமூகத்துக்குப் பொருத்தப்பாடுடைய பிள்ளைகள் குடும்பங்களில் இருந்தே உருவாகிறார்கள். மனித இருப்புக்களும் குடும்பங்களில் இருந்தே சமூகத்துக்கு அர்ப்பணிப்புச் செய்யப்படுகின்றன. பாரம்பரியங்களின் அடித்தளமும், பண்பாடுகளின் உறைவிடமும் குடும்பங்களே என்றால் மறுப்பதற்கில்லை.

## மகிமையை இழக்கும் குடும்பக் கட்டமைப்பு

எம்மினத்தின் அழகான கட்டமைப்பு குடும்பம் மேலைநாட்டவர் எம் குடும்ப வாழ்வியலை பார்த்து வியந்து நின்றனர். தலைவன், தலைவி கைகோர்த்து அறுசுவை உணவு உண்டு நன் மக்களை உருவாக்கி இல்லறம் என்னும் நல்லறம் காத்த குடும்பங்கள் இன்று பொலிவிழந்து கறைபடிந்து உடைவுகளோடும் சிதைவுகளோடும் இயங்கு நிலை கொள்கின்றன. 'தனிப்பெற்றோர்' என்ற சொல் நிலைகொண்டு விவாகரத்து, தற்கொலை போன்றவற்றையும் படிப்படியாக வியாபிக்கின்றன.

அறிவியல் சாதனங்கள் குடும்ப கட்டமைப்புக்களை உடைத்துப் போடுகின்றன. அவசர உலகில் நிலைகொண்டுள்ள வேண்டாத ஆடம்பரங்கள், குடும்ப உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்துகின்றன. போதைக் கலாசாரம் அழையா விருந்தாளியாய் ஊடுருவி வறுமையையும் வன்முறைகளையும் தாராளமாய்த் தருகின்றது. இதன் விளைவால் தற்கொலைகள் மற்றும் பிரிவினைகள் இடம்பெறுகின்றன. புனிதமான தாய்மை மரித்துப் போய் பெற்ற குழந்தைகளையே கிணறுகளில் வீசி சாகடிக்கும் அவலம்.

அன்று கூட்டுக் குடும்ப அமைப்பில் வயதானவர்கள் வழக்கறிஞர்களாக இருந்து விவாகரத்துக்கு தடை போட்டனர். இன்று அந்நிலை மாறி எந்த வேகத்தில் திருமணம் செய்தார்களோ அதைவிட வேகமாக விவாகரத்துப் பெறுகிறார்கள். மறுமணத்துக்கும் தயாராகிறார்கள். வயதானவர்களையும் விரட்டியடிக்கும் காலம் இது. இணைந்து வாழும் குடும்பங்களை விட்டுப் பிரிந்து வாழும் குடும்பங்களே அதிகம். நீதிமன்ற வாசல்களில் கைக் குழந்தையோடு நிற்கும் பெண்களின் எண்ணிக்கை ஒன்றா இரண்டா?

## நெறிமாறும் வாழ்வியல்

பெற்றோர் தமது பொறுப்புக்களை மறந்து விட்டனர். எல்லாப் புரிதல்களும் இருக்கும் மனிதனே இறுதி வரை மகிழ்வாய் இருக்கிறான். புரிதல்கள் குடும்பத்தில் இருந்து பெற்றோருக்கும், பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும். குடும்பத்தின் அத்திபாரம் பெற்றோர். பெற்றோரின் உலகம் பிள்ளைகள் பிள்ளைகளின் உலகம் பெற்றோர். பெற்றோரின் அறம் சார்ந்த, தர்மம் சார்ந்த வாழ்வியல் பிள்ளைகளை நேரிய வழியில் இட்டுச் செல்லும். எதிர்கால வாழ்வுக்கான அனைத்தையும் பெற்றோர்களிடம் இருந்தே பிள்ளைகள் பெற்றுக்கொள்கிறார்கள். எந்த ஒரு பிள்ளையும் பெற்றோரிடம் வரம் கேட்டுப் பிறப்பதில்லை. தாம் மகிழ்ந்திருப்பது, பெற்ற பிள்ளையை ஒழுங்காக வளர்க்க வேண்டியது பெற்றோரின் தலையாய கடமையாகும். பிள்ளைகள் முன் சண்டையிடுவதோ கணவனோ மனைவியோ பழிவாங்கும் வக்கிர உணர்வுகளோடு வாழ்வதோ 'நான்' என்னும் ஆணவம் தலை தூக்குவதோ, எதிர்பால் உறவுகளை குறைகூறுவதோ பெண்ணை அடிமைப்படுத்துவதோ ஆணை மதிக்காது வாழ்வதோ கூடவே கூடாது. இவையெல்லாம் பெரும் அவலங்களையே தரும். பெற்றோர் என்னும் விதை நிலங்களில் வளரும் விதைகள் பிள்ளைகள். சண்டையில் வளரும் பிள்ளைகள் சண்டையிட்டுக் கற்றுக் கொள்கின்றனர். கடுமையான சொற்களை கேட்கும் பிள்ளைகள் வார்த்தைகளால் அடுத்தவரை நோகடிக்கின்றனர் என்பதை பெற்றோர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல குடும்பத்தில் வளரும் பிள்ளைக்கு எக்காலத்திலும் எதிரி இல்லை என்பதை நம்பித்தான் ஆக வேண்டும். முதலாம் உலகப் போரின் பின்னர் வகை தொகையில்லாத உயிர்கள் படுகொலை செய்யப்பட்டும் அங்க இழப்புக்கள் ஏற்பட்டும் குடும்பங்கள் சிதைவடைந்தன. அந்நிலையில் மனிதனுக்கான குடும்பத்தின் தேவை உணரப்பட்டு திருக்குடும்ப ஞாயிறு பிரகடனப்பட்டது. வருடத்தின் இறுதி ஞாயிறு திருக்குடும்ப ஞாயிறாக கிறிஸ்தவ நாட்காட்டியில் பதிவாகி இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆக, ஒவ்வொரு மனிதனின் பின்னே குடும்பம் பாதுகாப்பை தருகிறது குடும்ப ஆரோக்கியமே மனிதனின் ஆரோக்கியம். குடும்ப ஆரோக்கியம் பேண மனிதனை மனிதனாக வாழ வைக்க நல்ல குடும்பங்களை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் பயணிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.பரமேஸ்வரன்

# இ.போ.ச. யாழ். சாலை நிர்வாகத்துக்கு மடல்!

இலங்கையில் மினி பஸ் சேவை அறிமுகமாக முன்னர் கீரிமலை பஸ் நிலையம் யாழ் பஸ் நிலையத்துக்கு அடுத்ததாக பெரிய பஸ் நிலையமாக விளங்கியது.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து எந்த பஸ்ஸில் புறப்பட்டாலும் கீரிமலைக்குச் செல்லலாம் என்ற நிலை காணப்பட்டது. 769, 768, 764, 788, 787 இலக்கங்களைக் கொண்ட எல்லா பஸ்களும் கீரிமலை பெயர் பலகையுடனேயே புறப்பட்டன. 769 இலக்க சேவை கொடிகாமம்- கீரிமலை சேவையாக இடம்பெற்றது. இதைவிட காலையும் மாலையும் கீரிமலை பளை பஸ் சேவையும் இடம்பெற்றது. வலிகாமம் மேற்கிலிருந்து வடமராட்சி செல்வோர் பஸ் மாறி ஏறும் தரிப்பிடமாகவும் கீரிமலை பஸ் நிலையம் விளங்கியது.

காலை, மாலை வேளைகளில் 769 இலக்க வழித்தடத்தில் யாழ். கீரிமலை கடுகதி சேவையும் இடம்பெற்றது. இந்த பஸ் முக்கிய சந்திகளில் மட்டும் தரிக்கும்.

கீரிமலை- காங்கேசன்துறை- மாவிட்டபுரம்- தெல்லிப்பழை- மல்லாகம்- சுன்னாகம் இப்படி முக்கிய சந்திகளில் மட்டும் தரித்து பிரயாணிகளை ஏற்றி இறக்கும். தினமும் 13 பஸ்கள் இரவில் கீரிமலை பஸ் நிலையத்தில் தரித்திருக்கும். அதிகாலை 3.45 முதல் சகல பஸ்களும் தமது சேவையை ஆரம்பிக்கும். இப்போது தனியார் சிற்றூர்திகள்தான் கீரிமலை பஸ் நிலையத்தில் தரித்து நிற்கின்றன.

போர் முடிந்து கீரிமலை விடுவிக்கப்பட்ட பின்னர் யாழ் சாலை கீரிமலையை கைவிட்டுவிட்டது. 769 இலக்க வழித்தடம் கொண்ட பஸ் தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை பெயர்பலகைகளுடன் புறப்படுகிறது. 788 இலக்க பஸ் இளவாலை வரை செல்கிறது. 768 இலக்க பஸ் அளவெட்டிக்குச் செல்கிறது. கீரிமலைக்கு செல்பவர்கள் தனியார் பேருந்துகளையே நம்பியிருக்க வேண்டிய நிலைதான் இன்று. பருத்தித்துறை காங்கேசன்துறை வீதி ஒருசில வருடங்களுக்கு முன்னர்தான் விடுவிக்கப்பட்டது.

ஆனால் பருத்தித்துறை சாலை 763 இலக்க கீரிமலை- பருத்தித்துறை சேவையை திறம்பட நடத்துகிறது. இளவாலை வரை நடைபெறும் 788 இலக்க பஸ் சேவைகளையும் தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை வரை நடைபெறும் 769 இலக்க சேவையையும் கீரிமலை வரை நடத்தினால் எத்தனை லீற்டர் டீசல் யாழ் சாலைக்கு மேலதிகமாக செலவாகும்? இப்போது கீரிமலையிலிருந்து தெல்லிப்பழை, மல்லாகம் போன்ற இடங்களுக்கு செல்பவர்கள் தனியார் பேருந்தில் சுன்னாகம் வந்து, சுன்னாகத்திலிருந்து இரண்டு பஸ் எடுக்க வேண்டிய நிலை தான் காணப்படுகின்றது.

தமது அன்றாட அலுவல்களின் நிமித்தம் பிரதேச செயலகத்துக்கோ, தெல்லிப்பழை மருத்துவமனைக்கோ செல்பவர்கள் இரண்டு பஸ் எடுக்க வேண்டும். அல்லது முச்சக்கர வண்டியை நாட வேண்டும் அல்லது மாவிட்டபுரத்துக்கு நடக்க வேண்டும்.


இலாப நோக்குடன் செயற்படும் தனியார் சிற்றூர்திச் சேவைகளான 768, 788 இலக்க சேவைகள் காலை 5.30 முதல் மாலை 5.30 வரை சகல சேவைகளையும் கீரிமலை வரை நடத்துகின்றன. சேவை நோக்குடன் செயற்படும் இ.போ.ச தனது கீரிமலை சேவைகளை நிறுத்திவிட்டது.

இ.போ.ச. யாழ். சாலை நிர்வாகம் கீரிமலையையும் திரும்பிப்பார்க்குமா?

## தமிழை சிதைக்காதீர்!

உதயனின் கடந்த புதன்பொய்கை பதிப்பில் (05.05.2021) மின்ஹாவின் 'நாங் கூழ்' என்ற நூலுக்கு மிஸ்ரா ஜப்பார் வரைந்த நயப்புரை வெளிவந்திருந்தது.
அதில் வந்துள்ள 'உணர்ச்சிப் பொங்குதலான மொழிமைக்குச் சான்று', 'குழலின் நாதத்தைக் குங்குமமாய்க் குலைத்து', 'இலகுவில் அகப்படாத மொழிமையின் நீட்சியாய்' என்ற தொடர்கள் புரியவில்லை.
'நிரப்பமாக', 'வேய்குழலாய்' ஆகிய சொற்களும் என் வாசிப்புப் பரப்பில் சந்திக்காதவை.
ஜப்பாருக்கு லகர, ழகரப் பிரச்சினை இருக்கையில் புதிய சொற்களை ஆக்க முனைவானேன்? தமிழை வளர்க்க வேண்டாம். சிதைக்காது விட்டாற்போதும்.

சோ.பத்மநாதன்
கொக்குவில்.



# ஆங்கில பேரோசான் கே.சி.சிவசுப்பிரமணியம்

கே.வி.என்.சிவலிங்கம்
பிரதி அதிபர்
யா/ புனித நகர் தமிழ் வித்தியாலயம்,
பருத்தித்துறை.



ஆங்கில பேராசான் கே.சி.சிவசுப்பிரமணியத்தின் 31 ஆம் நாள் நினைவு தினம் மிகவும் இக்கட்டான கொரோனா சூழ்நிலையில் வந்துள்ள இந்தக் காலகட்டத்தில் பத்திரிகை வாயிலாக அவர்தம் நினைவுகளைப் பகிர்வதில் பெருமையடைகின்றேன்.
தென்புலோலியூரிலே சின்னத்தம்பி உமையாள் தம்பதிகளின் ஏக புத்திரனாக 1944ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி பிறந்தார். தன்னுடைய கல்வியை வட மராட்சியின் புகழ்பூத்த பாடசாலைகளான புற்றளை மகா வித்தியாலயம், வேலாயுதம் மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ் ஆகிய மூன்று மொழிகளிலும் தோற்றி லண்டன் இளங்கலைமாணி பட்டதாரி ஆனார். அன்னாரின் ஆழ்ந்தகன்ற ஆங்கிலப் புலமையை அறிந்த பலரும் அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்று கற்றனர். அக்கல்விப் பணி பின்னர் வன்னி, மட்டக்களப்பு, தமிழ்நாடு என விரிந்து சென்றது.
சிவபாக்கியம் என்பவரை இல்லாளாகக் கொண்டு தன் மணவாழ்வைப் பேறாக்கினார்.
கே.சி.சிவசுப்பிரமணியம் மகத்தான கல்விப் பணியை சமூகத்துக்கு வழங்கி இருந்தார். தரம் மூன்றிருந்து உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்துறை சார்ந்தவர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், விரிவுரையாளர்கள் எனப் பல்வேறு மட்டத்தினரும் அன்னாரிடம் ஆங்கிலம் கற்றனர். கற்பித்தலின் போது எந்தவிதமான குறிப்புகளோ புத்தகங்களோ அகராதியோ இன்றி வகுப்பை ஆறு, ஏழு மணித்தியாலயங்கள் வரை நடத்திச் சென்ற கல்வியாளன் அவர்.
கே.சி.சிவசுப்பிரமணியம் சமூகம் சார்ந்த விடயங்களில், நாட்டு நடப்புக்களில் அதிக அக்கறை உடையவராகத் திகழ்ந்தார். அதிகபடியாக வானொலி கேட்கும் வழமையுடைய அன்னார் அதில் கேட்ட நடப்பு விடயங்களை கற்பித்தலின்போது மாணவர்களுக்கு வழங்குவார்.
கற்றல் கற்பித்தல் துறையில் பலவித மாற்றங்கள் வந்துள்ள இன்றைய சூழலிலும் மாணவர்கள் நேரத்துக்கே வந்து இவரதும் இவரது வீடு சார்ந்த பணிகளையும் விருப்பத்தோடு ஆற்றுவர். இன்றும் கூட பல மருத்துவ நிபுணர்கள் இதனைப் பெருமையாகக் கூறி மகிழ்வர். ஒரு வகையிலே திண்ணைக் கல்வி மரபின் தனித்துவம் ஒன்று நிறைவுபெற்றுள்ளது என்றும் கூற முடியும். இறுதிக் காலங்களிலே கதிரையில் நீண்டநேரம் அமர்ந்தபடி தன் கற்பித்தலை கண்ணியமான முறையிலே மேற்கொண்டார். எந்தவிதமான ஆங்கிலம் சார்ந்த சந்தேகங்களையும் உடனடியாகத் தீர்க்க வல்ல பேராளுமையாக அன்னார் திகழ்ந்தார்.
உலக அரங்கில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பலரும் இவரிடம் கற்றவர்களாக சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டவர்களாக உள்ளமை பெருமைக்குரியதாகும்.
அன்னாரின் உயர்ந்த பணியைப் பாராட்டி அகில இலங்கை இளங்கோ கழகத்தினர் 2018ஆம் ஆண்டு புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவில் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார் அரங்கில் வைத்து 'மொழி ஞாயிறு' எனும் உயர் விருதை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.
இப்பேற்பட்ட பெருமைக்குரிய ஆங்கில பேராசன் கே.சி. சிவசுப்பிரமணியத்தின் பெருமையை நினைவுகூர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# தோல்வியின் வெளிச்சம்

வர்ணி
முல்லைத்தீவு

நான்கு வயது வரை ஒரு குழந்தைக்கு பேச்சு வரவில்லை. ஏழு வயதில் பாடசாலையில் கல்விகற்ற அந்தக் குழந்தையை ஆசான், 'மண்டு', 'மொக்கு', 'மூளை வளர்ச்சி இல்லாதவன்' என்று வசைபாடுகின்றார். கவனக்குறைவால் பெரும் துன்பத்தை அனுபவித்த இந்தக் குழந்தை கேள்திறன் குறைபாடு மட்டுமன்றி தன்னுடைய நாமத்தையே ஒரு சமயம் மறந்து போனவன். இப்படிப்பட்ட ஒரு குழந்தை தானே கற்பித்துக்கொண்டு உலகம் முழுவதும் 2 ஆயிரத்து 332 காப்புரிமைகளைப் பெற்றான் என்றால் நம்ப முடிகிறதா?
20ஆம் நூற்றாண்டின் தலையெழுத்தையே மாற்றிய மிகப்பெரிய அறிவியல் விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன். இவரைப் பற்றிய இந்த அறிமுகம் நம் அனைவரையும் ஒரு கணம் வியக்க வைக்கும். விடாமுயற்சி, பொறுமை இவ்விரண்டுக்கும் இவரை விட சிறந்த உதாரணமாக யாரைக் கூறிவிட முடியும். எல்லோருக்கும் தெரிந்த வரையில் தோமஸ் அல்வா எடிசன் ஒரு விஞ்ஞானி.
பலருக்குத் தெரியாதது அவர் ஒரு நல்ல தொழில் முனைவர் என்பது. எடிசன் எப்பொழுதும் தான் கண்டுபிடித்த சாதனத்தை எளிய மக்கள் வாங்க வசதியாக மலிவு விலையில் உற்பத்தி செய்யும் வழிமுறையைக் கண்டறியும் வரை ஓயாதவர். 5 மணி நேரத்துக்கு ஒரு முறை 4 மணி நேரத் தூக்கம். அது தான் அவரின் ஓய்வுநேரம்.
**இன்று எமக்கெல்லாம் வெளிச்சம் தந்தவர் அவர். அவ் வெளிச்சத்துக்குப் பின்னால் அவரது கடின உழைப்பை நாம் நினைவுகூர்ந்ததாக வேண்டும். மின்**குமிழைக் கண்டுபிடிக்க ஏராளமான விஞ்ஞானிகள் முனைந்திருக்கின்றனர். ஆனால் அவர்களால் இயலவில்லை. மின்விளக்கு நீண்ட நேரம் எரிய எந்த மின்னிழை ஏதுவானதாக இருக்கும் எனக் கண்டறிய கிட்டத்தட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்னிழைகளை பரிசோதனைக்கு உட்படுத்தினார். 5 ஆயிரம் மின்னிழைகளும் மின்விளக்குக்குப் பொருந்தாமல் போனபோதும்கூட மனந்தளராமல் விடாமுயற்சியோடு சரியான மின்னிழையைக் கண்டறிந்தார். இந்நிகழ்வு பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.
ஆனால் சேம மின்கலத்தை கண்டுபிடிக்க முனைந்தபோது சரியான நேர்மறை மின்தகட்டைக் கண்டுபிடிக்கும் முன் 50 ஆயிரம் பொருள்களை ஆராய்ந்து எடிசன் தோல்வியுற்றிருக்கிறார். ஆனால் அவரே 'நான் 50 ஆயிரம் முறை தோற்கவில்லை, 50 ஆயிரம் பொருள்கள் இதற்கு உதவாது என்று கண்டறிந்து வெற்றியடைந்துள்ளேன்' என்றார். இவர் உண்மையில் ஒரு பீனிக்ஸ் மனிதன்தான்.
இம்முறை உயர்தரப் பரீட்சையில் தமது இலக்குகளைத் தவறவிட்ட மாணவர்களே! தோற்றுவிட்டதாய் எண்ணி துவண்டு விடாதீர்கள். 50 ஆயிரம் தோல்விகளின் பின்னேதான் இன்றும் நிலைத்து நிற்கின்ற மாபெரும் வெளிச்சம் எமக்குக் கிடைத்துள்ளது. தோல்வி என்று தளர்ந்துவிடாது மாபெரும் கனவை நோக்கி முயற்சியுடன் இம் மனிதனைப் போலவே அடியெடுத்து வைத்து நிலையான சாதனையைப் பதியுங்கள். 'காலில்லை என்று பாம்பு கவலைப்பட்டதில் [illegible] பதற்குள் [illegible]?

# இரு நூல்கள் ஓர் அறிமுகம்

ம.பா.மகாலிங்கசிவம்




பண்டிதை, கலாபூஷணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளையின் சிறுவர் பாடல்கள் மற்றும் கிராமிய நடனப் பாடல்கள் ஆகிய இரு நூல்கள் இணுவில் பொது நூலகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. இணுவிலைச் சேர்ந்த பண்டிதை பல்துறை சார்ந்த 24 நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.
சிறுவர் பாடல்கள் என்னும் நூல் சிறுவர்களுக்கான 20 பாடல்களைக் கொண்டதாக 28 பக்கங்களில் அழகிய வர்ணப்படங்களுடன் வெளிவந்துள்ளது. இணுவையூர் உத்திரன், இணுவில் பொதுநூலகத் தலைவர் சி.சிவகணேசன், வட மாகாண கல்வித் திணைக்கள ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் திருமதி. ஜெ.தம்பையா ஆகியோரின் வாழ்த்துரைகளும் நூலில் இடம்பெற்றுள்ளன.
சின்னச் சின்னப் பொம்மை, இயற்கைக் [illegible] வளர்ப்பு, காட்டில் [illegible] மிருகங்கள் விழா எடுத்து மகிழ்ந்தன முதலிய தலைப்புக்களில் சிறுவர்களின் அநுபவ உலகினுள் உள்ளடங்கும் விடயங்களே கவிதைப் பொருள்களாகியுள்ளன.

**'சின்னச் சின்னப் பொம்மை
சிறிய நல்ல பொம்மை
என்ன வேண்டும் சொல்லேன்
ஏனோ பேசவில்லை
காலுங் கையும் ஆட்டிக்
கண் சிமிட்டும் பொம்மை
கோல அழகு கண்டு
கொஞ்சி விட்டேன் உன்னை'** என்பது கவிஞரின் கவித்திறனுக்கு வகை மாதிரியான சான்றாகும்.

கிராமிய நடனப் பாடல்கள் என்னும் கும்மி, வேப்பிலை நடனம், பந்து நடனம், கோலாட்டம், அரிவி வெட்டும் நடனம், கப்பல் பாட்டு முதலிய கிராமிய நடன வகைகள் சார்ந்த 22 பாடல்களின் தொகுப்பு ஆகும். சிவஸ்ரீ வை.சோமாஸ் கந்தக் குருக்கள், பேராசிரியர் க.தேவராசா, பண்டிதர் க.வே.பஞ்சாட்சரம், சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், ஓய்வு நிலை விரிவுரையாளர் சாந்தினி சிவநேசன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் நூலில் இடம்பெற்றுள்ளன.

**'பந்தடித்து நாமும் நீயும்
ஒன்று கட்டி ஆடுவோம்
பைந்தமிழ் பண்பு பாடி
பைந்தொடியர் ஆடுவோம்
கைவளையல் குலுங்க நாமும்
எழுந்து பந்து ஆடுவோம்
மைவிழியார் ஒன்று கூடி
மகிழ்ந்து பந்து ஆடுவோம்**
என்பன பந்து நடனத்தில் இடம்பெறும் இரு பாடல்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சர்வதேச தாதியர் தினம். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# கொரோனாவும் தாதியமும்



பத்மராசா பத்மநிருபன்
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

இந்தப் பெருந்தொற்றானது தாதியர், வைத்தியர்கள் மற்றும் சக சுகாதார ஊழியர்கள், பலதரப்பட்ட உத்தியோகத்தர்கள் போன்றோரது அரிய அர்ப்பணிப்பான சேவையின் வெளிப்பாடையே சுகதேகிகளாக வெளியேறுகின்ற நோயாளர்கள் எண்ணிக்கையின் உயர்வு காட்டிநிற்கின்றது.

கொரோனாப் பெருந்தொற்று உலகளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையையும் சுகாதாரத்தையும் வாழ்க்கை முறைகளையும் பாதித்திருக்கின்றது.
இதற்கு இலங்கை மக்களும் விதிவிலக்கல்லர். பல நாடுகளதும் சுகாதாரத் துறைமிகவும் வீரியத்துடனும் சிறப்புடனும் செயலாற்ற வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது. சுகாதாரத் துறையின் முதுகெலும்பாகத் திகழும் தாதியத் துறையினரே நேரடியாக முகம் கொடுக்கின்ற முன்னிலை முகாமையாளர்களாக கிருமிக்கெதிராகவும் கிருமிப் பரவலுக்கு எதிராகவும் போராடுகின்ற படையினராகத் திகழ்கின்றனர் என்றால் மிகையாகாது. தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பல சமூகத்தினரும் முன்னின்று உழைப்பது உண்மையே. எனினும் தொற்று ஏற்பட்டவரின் பராமரிப்பின் முக்கிய பங்குதாரராக தாதியரே களமாடுகின்றனர்.

### நிகழ்கால உலகில் தாதியரின் மகிமை

வகுத்துக்கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கும் சுகாதார நடைமுறைகளுக்கும் செயன்முறை வழிகாட்டல்களையும் பின்பற்றி தங்களது உயிரையும் துச்சமென மதித்து தமது குடும்பம், சமூகத்தையும் மறந்து தாதியப்பணியை ஆற்றுகின்றவர்கள் என்றும் போற்றுதலுக்கு உரியவர்களே. கொரோனா நோயாளி என்றவுடன் அந்த ஊருக்கே போகப்பயப்படும் இவ்வுலக நடைமுறையில் தனது உடலை வருத்தி பாதுகாப்புக் கவச உடைகளை அணிந்து நோயாளி அருகில் சென்று சேவையாற்றுபவர்கள் தாதியரும் அவர்தம் பல்தரப்பட்ட ஆளுமையைச் சேர்ந்தவர்களுமே.
இந்தக் கொரோனாத் தொற்றுதொடர்பில் தாதியர் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினை ஆள் பற்றாக்குறையாகும். சாதாரண நோயாளிகளது பராமரிப்பும் அதிகரித்துள்ளமை, பெருந்தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை போன்ற காரணங்களால் ஆள்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நோயாளர்களுக்குரிய கட்டில் வசதிகள், இடவசதிகள், மருத்துவ உபகரண வசதிகள், கட்டடங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு கவச உடைகள், கொரோனா சம்மந்தமான பயம், சமூகவடு மற்றும் உளவியல் பிரச்சனைகள் தொற்று தொடர்பான அதிக பட்ச பதட்டம் என்பனவும் தாதியர் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளாக உருவெடுத்துள்ளன. தாதியரை சிறப்பான கௌரவமான இடத்தில் வைத்துப் பேணுவதன் மூலம் அவர்களது பயம், பதற்றத்தைப் போக்கி கூடியவகையிலும் கொரோனாத் தொற்று நோயாளருடன் பழகக்கூடிய ஆற்றலை மேம்படுத்தும் வகையிலான சுகாதார வழிகாட்டல்களும் தட்டிக் கொடுத்தல்களும் மிகையான பணியை ஆற்றிட வழிவகுக்கும் என்றால் ஐயமில்லை.

### மக்களின் கவனமின்மையால் பெருகிச்செல்லும் கொரோனா

பெருந்தொற்றானது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய, உயிர்ப்பாதிப்பைக்கூட ஏற்படுத்தக்கூடிய வைரஸ் தொற்றாகும். உலகளாவிய ரீதியில் மிகவும் பாரதூரமான முறையில் பொருளாதார, சுகாதார, கல்வி, வாழ்க்கை முறைகள் போன்றவற்றின் செல்வாக்கை செலுத்தி தனது அகோர தாண்டவத்தால் புரட்டிப்போட்டுள்ளது. எத்தனையோ வல்லரசுகளைக்கூட ஆட்டம்காண வைத்துள்ளது. இயற்கையை திரும்பிப் பார்க்கவைத்துள்ளது. வேலைகளை இழந்துள்ளமை, பொருளாதார கஸ்ரம், குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு தொற்று ஏற்படுதல் போன்றன மூலம் மன அழுத்தங்களும் மனச்சோர்வும் ஏற்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஏதோ தவறு செய்தமைக்கு கிடைத்த தண்டனைபோல எண்ணி சமூகத்தில் இருந்து ஒதுக்கிவைப்பதும் கேவலமாகக் கதைப்பதும் பேசுபொருளாக ஆக்குவதும் எமது சமூகத்தின் அறிவற்றதன்மையையும் மனமுதிர்ச்சியற்ற தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. சுகாதாரத் துறையைப் பொறுத்த வரையில் இந்தப் பெருந்தொற்றானது மிகப்பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. இன்று இத்தொற்றானது என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. தொற்றுக் கட்டுப்பாட்டு முறைகளை பல்தரப்பட்ட அமைப்பினரும் தமது பங்குகளை ஆற்றுவதன் மூலம் நடத்திச் சென்றாலும் மக்களது கவனமின்மையும் சுகாதார நடைமுறைகளை பேணாத தன்மையுமே பெரியளவிலான இந்தத் தொற்றுப் பெருக்கத்துக்குக் காரணமாய் இருக்கிறது.

### தாதியத்தை மதிப்போம்

பெருந்தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு அவர்களது குடும்ப அங்கத்தவர்களே பணிவிடை செய்யப் பயப்படும்போது தாதியரும் அவர்தம் சக ஊழியர்களும் நோயாளர்களுக்குரிய உடல், உள, ஆரோக்கியத்தை மேம்படுத்த பணியாற்றுகின்றனர். பயிற்சியின்போது கற்றுக் கொண்டதை விட மேலதிகமான உலகிற்கே புதிய நோய்



தொற்றாக இருக்கின்ற இந்த நோய் நிலைக்கேற்ப தாதிய பராமரிப்பை தாமும் கற்றுக்கொண்டு தமது உடலை வருத்தி எத்தனையோ உபாதைகளுக்கு ஆளாகி இன்றைய வெப்பதட்ப நிலைகளையும் பாராது பாதுகாப்பு உடைகளை அணிந்து பணியாற்றுவது போற்றுதலுக்குரியது. இந்தப் பெருந்தொற்றானது தாதியர், வைத்தியர்கள் மற்றும் சக சுகாதார ஊழியர்கள், பலதரப்பட்ட உத்தியோகத்தர்கள் போன்றோரது அரிய அர்ப்பணிப்பான சேவையின் வெளிப்பாடையே சுகதேகி களாக வெளியேறுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையின் உயர்வு காட்டிநிற்கின்றது. இறப்பு என்பதுகூட பல கடும் முயற்சிகளையும் தாண்டிபெரும் தொற்றின் வீரியத்தன்மைக்கு ஈடுகொடுக்க முடியாமல் போவதாலேயே ஏற்படுகின்றது. அந்த நிலையில் கூட தாதியத்தின் வரைவிலக்கணத்துக்கேற்ப அமைதியான மரணத்துக்கு கூட உதவிபுரிகின்ற உயரிய சேவையை தாதியரும் உதவிக்குழுவினரும் ஆற்றுகின்றனர். இறப்பை எதிர்நோக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்களின் சமய அபிலாசைகள்;, மன அழுத்தம், பயம், பதட்டம், குடும்ப அங்கத்தவர்களுக்குரிய உள ஆலோசனை என ப... தடங்களில் பணியாற்ற வேண்டியுள்ளது. தாதியர் தம் தொற்று தொடர்பான பயத்தைக் கொண்டிருந்தாலும் அதனை வெளிப்படுத்தாது சேவையாற்றுகின்ற பெரும் திடம் இறைவன் கொடுத்த வரமே ஆகும்.
கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் பணியாற்றும் எல்லாத் துறையினரையும் போற்றிப் பாராட்ட வேண்டிய நிலையில் தொற்று ஏற்பட்ட பின்னர் சேவையாற்றும் தரப்பில் முன்னிற்கக்கூடிய வைத்தியர், தாதியர், சக ஊழிய மருந்தாளர், தொழில்நுட்பவியலாளர்கள் என பலதரப்பட்ட சேவைகளின் வெளிப்பாடாக அமைந்து கொரோனாத் தொற்றுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். உலக தாதியர் தினமான இன்று ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்கின்றோம். அர்ப்பணிப்பான சேவையாற்றும் சேவையாளரை மதியுங்கள். அவர்களது சேவைக்கு உயரிய மதிப்புக் கொடுக்கும்படியாக முகக்கவசம் அணியுங்கள், கைகளைக் கழுவுங்கள், சமூக இடைவெளியைப் பேணுங்கள். பெருந்தொற்றிலிருந்து எம்மையும் சமூகத்தையும் நாமே பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொரோனா கட்டுப்பாடுகள்

# மீறுபவர்களை எதிர்க்கும் சமூகமனோநிலை வேண்டும்

*உதய கம்மன்பில வலியுறுத்து*



**கொழும்பு, மே 12**

**கொரோனாக் கால தனிமைப்படுத்தல் சட்டம் எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் பொதுவான வகையிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனவே, அதனை எவராவது மீறினால், அவருக்கு எதிராக சமூகத்தில் இருந்தும் எதிர்ப்பு வரவேண்டும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் ஆள்களின் பலத்தை பார்த்து, பிரித்து தொற்றாது. அனைவருக்கும் தொற்றும். எனவே, அரசு என்ற வகையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை நூறு வீதம் செயற்படுத்துவதற்கே எதிர்பார்க்கின்றோம்.

அந்தவகையில் முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக பொலிஸார் மற்றும் சுகாதாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியம்.

முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாமல் முண்டியடிப்பவர்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளியிட வேண்டும். அதுமட்டுமல்ல தடைகளை மீறி நிகழ்வுகளை நடத்தினால் அவற்றை உரிய வகையில் சுட்டிக்காட்டி தடுக்கும் கலாசாரம் உருவாக வேண்டும் - என்றார்.

(எ-4,44)

---

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு

கொழும்பு, மே 12

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

கொரோனா பரவல் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இடர்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் பொறுப்புடன் செயற்படும் விதம் குறித்து மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ராஜதந்திரிகளை சந்தித்தபோது நாட்டுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்காருட் கலந்துக் கொண்டுள்ளார்.

இதன்போது, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய, சங்கத்தின் ஏனைய பிரதிநிதிகளான மருத்துவர்கள் ஹரித அளுத்கே, நளிந்த ஹேரத், சந்திக எப்பிடகொட, ஷேனால் பெர்னாண்டோ, சமந்த ஆனந்த, எச்.என். டி. சொய்நா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ப-இ)

---

## அரச நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, மே 12

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் அரச சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கான புதிய சுற்றறிக்கை, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக அரச ஊழியர்களை சேவைக்கு அழைக்கும்போது நிறுவனங்களின் பிரதானிகள் பின்பற்ற வேண்டிய 10 விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காக குறைந்தளவிலான ஊழியர்களை வரவழைப்பது தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அமைச்சுக்களின் செயலாளர்கள், நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முறையான திட்டமிடலொன்றின் அடிப்படையில் ஊழியர்கள் பணிக்கு சமுகமளிக்க வேண்டிய தினத்தில் சமுகமளிக்காவிட்டால் மாத்திரம், அன்றைய தினத்தை அவரது தனிப்பட்ட விடுமுறையாகப் பதிவு செய்ய வேண்டும். விதிமுறைகளின் படி ஊழியர்களை பணிக்கு அழைக்கும்போது, அதில் கர்ப்பிணிகள் உள்ளடக்கப்படக்கூடாது.

பணிக்குச் சமுகமளிக்க தேவையற்ற தினங்களில் குறித்த ஊழியர்கள் இணைய வழியூடாக சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொதுமக்களுக்கான சேவை வழங்கும் நிறுவனங்களில் பொதுப் போக்குவரத்தை விட இயன்றவரை தனிப்பட்ட வாகனத்தை அல்லது சேவை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தை மாத்திரம் பயன்படுத்துவதோடு, அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக பொது மக்களுக்கான அனுமதியும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ஏதேனுமொரு வகையில் அரச ஊழியர்கள் தனிமைப்படுத்தப்படுவார்களாயின் இந்த தனிமைப்படுத்தப்படும் காலப்பகுதிக்கு ஊதியம் வழங்கப்படும் - என்றுள்ளது.

(எ-4)

---

## நாட்டில் முடக்கத்தை ஏற்படுத்தும்போது முன்னாயத்தப் பொறிமுறை அவசியமே

*வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி தெரிவிப்பு*

கொழும்பு, மே 12

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு ஏதேனுமொரு மாவட்டம் அல்லது பிரதேசம் முடக்கப்படும்போது அவற்றுக்கான அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதற்கான முன்னாயத்தப் பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது அவசியமாகும் என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி கடந்த ஞாயிற்றுக்கிழமை அலரி மாளிகையில் கூடியது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட பொறிமுறை சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொறிமுறையில் கூறப்பட்டுள்ளதாவது,

தனிமைப்படுத்தப்படும்போது அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் பிரதேச மட்டங்களில் தயாரிக்கப்பட்டு அவை பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட வேண்டும். அத்தோடு அவை நிறைவுசெய்யப்பட்டு மே மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி அறிவிக்கப்பட வேண்டும். அரிசி, மரக்கறி உள்ளிட்ட நுகர்வோருக்குத் தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் வீடுகளுக்கு விநியோகிப்பதற்காக திட்டமிட்டுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், விநியோக வலையமைப்பு மற்றும் விநியோகஸ்தர்களுடன் இணைந்து அடிப்படை கலந்துரையாடல்களை விரைவில் முன்னெடுத்தல். சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக குறைந்த நடமாடும் வர்த்தகர்களுக்காக அனுமதியை வழங்குதல். இதன்போது பிரதேச செயலக பிரிவுகளில் நடமாடும் வர்த்தக நடவடிக்கைக்காக நடமாடும் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் மாவட்டங்களுக்குள் அல்லது மாவட்டங்களுக்கு வெளியே உணவு பொருள்களை விநியோகிப்பதற்குத் தேவையான அனுமதிப்பத்திரங்கள் மாவட்டச் செயலாளர்களால் விநியோகிக்கப்பட வேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தால் அல்லது முடக்கப்பட்டால் பொருள் மற்றும் சேவை விநியோகத்தில் ஈடுபடும் தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள், விநியோகத்தர்கள், முதல் நிலை, இரண்டாம் நிலை விநியோகத் தர்கள் என அடையாளம் காண்பதற்கு நடமாடும் வர்த்தக அனுமதிப்பத்திரத்தை மக்கள் ஒன்றுகூடாத வகையில் விநியோகித்தல் வேண்டும். அரச வங்கிகள், சதொச மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் எப்போதும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி திறந்து வைக்க நடவடிக்கை எடுத்தல் - என்றுள்ளது.

(ப-இ)

---

## வீரச் சிங்களவர் என்ற வகையில் இலங்கையைக் காப்பாற்றுங்கள்

*பிரதமரைக் கோரினார் ஆனந்த தேரர்*



கொழும்பு, மே 12

தெற்கின் வீரச் சிங்களவன் என்ற வகையிலும், படை வீரன் என்ற வகையிலும், முன்வந்து நாட்டைக் காப்பாற்றுங்கள் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுகாதாரத் துறையில் நான் அறிந்த பிரச்சினைகள் உட்பட நாட்டின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி முதல் கீழ் மட்டத்தில் இருக்கும் சகல அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்திய போதிலும், எவ்வித தீர்வும் கிடைக்காத நிலைமையில், பிரதமரிடம் இந்த கோரிக்கையை விடுக்கிறேன். எம்மிடம் இருக்கும் சகல அறிக்கைகளையும் நாங்கள் ஒரே நேரத்தில் வெளியிட்டால், அவை எங்கு போய் முடியுமோ தெரியாது. ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பினோம். சுகாதார அமைச்சரை தொடர்புகொண்டு பல முறை கூறினோம்.

தற்போது இந்தப் பிரச்சினைகளை யாரிடம் கூறுவது என்று தேடிக்கொண்டிருக்கின்றேன். மக்களின் பாதுகாப்புக்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பிடமே தற்போது இந்த பிரச்சினைகளைக் கூற வேண்டியுள்ளது. அந்த அமைப்பிடமாவது கூறிப் பார்ப்போம். இலங்கையில் நான் கூற எவரும் இல்லை. பிரதமர் அவர்களே தற்போதாவது தெற்கின் வீரச் சிங்களவர் என்ற வகையிலும் படை வீரன் என்ற வகையிலும் நீங்கள் முன்வந்து நாட்டைக் காப்பாற்றுங்கள்.

தயங்கம் வேண்டாம். எங்களுக்குத் தெரியும். நீங்கள் தற்போது சுகவீனமாக உள்ளீர்கள். சுகவீனமாக இருந்தாலும் உங்கள் மீதான நம்பிக்கை காரணமாக நாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இந்த நம்பிக்கையை சீர்குலைத்துக்கொள்ளாது மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நான் மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

(ப-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையான இலங்கைக்கு புதிய செயலணி அமைப்பு

கொழும்பு, மே 12

காலநிலை மாற்றத்துக்கான நிலையான தீர்வுடன், பசுமை இலங்கையை உருவாக்குவதற்கு, புதிய ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தச் செயலணியை அமைத்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியான பசில் ராஜபக்ச தலைமையில், அமைச்சரவை அமைச்சர்கள் ஐவர், ஆளுநர் ஒருவர், இராஜாங்க அமைச்சர்கள் 14 பேர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 46 பேர் இந்தச் செயலணியில் அங்கம் வகிக்கின்றனர். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதியால், கடந்த 27 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சூழலுக்குப் பொருந்தக்கூடிய பொருளாதார சமூகத்தைக் கொண்ட நாட்டுக்காக, மக்களை ஒன்று திரட்டுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இந்தச் செயலணி கவனம் செலுத்தவுள்ளது.

குறிப்பாக விவசாய நடவடிக்கைகளின்போது இரசாயன உரங்கள், கிருமிநாசினிகளுக்குப் பதிலாக இயற்கைக் கிருமிநாசினிகள் மற்றும் உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இயற்கை விவசாயத் திட்டத்துக்கு விவசாயிகளை மாற்றுதல், அதற்கான வழிமுறை களைப் பின்பற்றுதல் இந்தச் செயலணியின் பிரதான கடமை என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-4)

# பேஸ்புக்கை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு இல்லை

## இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, மே 12**

**உரிமையாளர்கள் இல்லாத முகநூல் பக்கங்களை இடைநிறுத்தவோ அதனைக் கட்டுப்படுத்தவோ இலங்கை அரசுக்கு எந்த அதிகாரங்களும் இல்லை என இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் சுமார் 20 லட்சம் முகநூல் பக்கங்களுக்கு உரிமையாளர்கள் இல்லை என ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல எந்த அடிப்படையில் கூறுகிறார் என்பது சிக்கலுக்குரியது என அந்த சங்கத்தின் தலைவர் ரஜீவ் யசிரு குருவிட்டகே தெரிவித்துள்ளார்.

முகநூல் கணக்குகளை நீக்கவோ, அவற்றை முறைப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்து வதற்கோ அரசுகளுக்கோ வேறு அணிகளுக்கோ அதிகாரம் இல்லை. சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்த அரசு மேற்கொள்ளும் இப்படியான அறிவிலியான கருத்துக்கள் குறித்தும் இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தனது அதிருப்தியை வெளியிடுகின்றது" என்றும் குருவிட்டகே தெரிவித்தார். (ப)

# சீனத்தடுப்பூசி மாதந்தோறும் இலங்கைக்குக் கிடைக்கும்

## மருந்தக கூட்டுத்தாபனம் தகவல்

கொழும்பு, மே 12

சைனோஃபோர்ம் தடுப்பூசியை ஒவ்வொரு மாதமும், இலங்கைக்கு வழங்க சீனா இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்கமைய ஒரு மில்லியன் அல்லது இரண்டு மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கும் என்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சீனாவுடன் இதுவரை நடத்தப்பட்ட பேச்சு வெற்றியளிக்கும் நிலைமையில் உள்ளது. அதேபோன்று ரஷ்யாவின் ஸ்புட்னிக்வி தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வதற்கு அந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்யப்படும். இலங்கையில் களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய அளவுக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்கும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



# வீதிகளை கண்காணிக்க ட்ரோன் கமராப்பிரிவு

கொழும்பு, மே 12

வீதிகளில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்கு, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ட்ரோன் கமராப் பிரிவு பணிகளை ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி வருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துதல், வீதிச் சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் உள்ளிட்ட கண்காணிப்புக்களை இந்தப் பிரிவு மேற்கொள்ளும்.

குறிப்பாக காலி வீதி, நாடாளுமன்ற வீதி, கண்டி நீர்கொழும்பு வீதி உள்ளிட்ட பகுதிகளில் ட்ரோன் கமராக்கள் கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# போலியான காசோலை வழங்கி ரூ.430 லட்சம் பணம் மோசடி!

## ஐந்து பேர் கைது




கொழும்பு, மே 12

வீட்டு நிர்மாணப் பணிகளுக்காக இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான வங்கிக் கணக்கொன்றில் போலியான காசோலையை வழங்கி, 430 லட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே நான்கு பேர் குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். சந்தேக நபர்கள் அனைவரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் அந்த நிறுவனத்தின் ஊழியர்களைப் போன்று காசோலையை மாற்றுவதற்காக வங்கிக்குச் சென்றவர் எனக் கூறப்படும் நபர்களுள் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# தடுப்பூசி செலுத்தியோருக்கு இலத்திரனியல் அட்டை




இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்த அடையாள அட்டையில் தடுப்பூசி செலுத்திய திகதி, அடுத்த தடுப்பூசி செலுத்த வேண்டிய திகதி, தடுப்பூசி செலுத்திய இடம் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்படும்.

சுகாதார அமைச்சால் எதிர்வரும் காலத்தில் இந்த அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# திருமலைக்கும் தாவியது உருமாறிய கொவிட் வைரஸ்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



திருமலை, மே 12

பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொவிட் வைரஸ் திருகோணமலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று திருகோணமலை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

திருகோணமலை தொற்றுநோயியல் பிரிவு கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் கந்தளாய், சீனக்குடா, உப்புவெளி பிரதேசங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக மாதிரிகளைப் பெற்று அதனைக் கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பிவைத்துள்ள நிலையில் இந்த வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 42 கொவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் ஆயிரத்து 961 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 20 உயிரிழப்புகள் இன்று வரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இன்று வரை 520 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் -என்றார். (ப-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கொரோனா...**
துள்ளனர் எனவும், 23 ஆயிரத்து 569 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

# 2 நாள்களில் 49 பேர் சாவு

## கொரோனா உயிரிழப்பு 850

கொழும்பு, மே 12
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 49 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று 23 சாவுகளும், நேற்றுமுன்தினம் 26 சாவுகளும் பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 850ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினமே நாட்டில் அதிகளவு கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன. வத்தேகம பகுதியைச் சேர்ந்த 3 மாத குழந்தை ஒன்றும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளது. (ம-22)

# விபத்துக்குள்ளான நபர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், மே 12
முருங்கன் சிலாவத்தை வீதியில் கடந்த 6ஆம் திகதி விபத்துக்குள்ளான இளைஞர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

வேதநாயகம் ஜிரோன் ரஞ்சித் என்ற 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவர். மோட்டார் சைக்கிளில் சென்ற அவர் எதிரே வந்த லொறியுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். (ம-26)

# மேலதிக மாவட்டச் செயலரின் மனைவி, மகனுக்கும் தொற்று

யாழ்ப்பாணம், மே 12
கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரின் மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கொரோனாத் தொற்றுடன் 3 வயதுச் சிறுவனும், உடுவில் சுகாதார மருத்துவமனைக்கு உட்பட்ட பகுதியில் 8 வயதுச் சிறுவன் ஒருவனும் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ஓ.5)

**A/L பௌதிகவியல்**
2023 - A/L , 2021 Day
Zoom ஊடாக
M.Karunanithy B.sc (Hons) T.P.:077 618 3064
English & Tamil Medium நடைபெறுகின்றது.

**நாகபூஷணி திருமண சேவை**
**மணமகள் தேவை**
1984, செவ்வாயற்ற, 15 பாவம் உள்ள அரச உயர் பதவியிலுள்ள மணமகனுக்கு மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது. அரச தனியார் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும். **077 138 7596, 021 222 9306**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் பரிபாலன சபை முன்னாள் தலைவரும் நீண்டகால பரிபாலன சபை உறுப்பினரும் ஆலயத் தொண்டரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

அமரர்
**செல்லத்துரை மயில்வாகனம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**த.தர்மலிங்கம் குடும்பம்**
**முன்னாள் பரிபாலன சபைத் தலைவர்**
**அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில்.**

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
**யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்**
**(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**
தொடர்பு: **077 468 3354, 077 288 0152**
**074 075 4204**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 10 - 05 - 1932



**மறைவு** 11 - 05 - 2021

### திருமதி இரத்தினசபாபதி சுபத்திராதேவி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி சுபத்திராதேவி அவர்கள் நேற்று (11.05.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பார்க்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரன், ஜெகதீஸ்வரி, ஞானேஸ்வரி, சிவநேஸ்வரன், கலாவதி, விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன், ஆகியோரின் பாசமிகு தாயாரும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற யோகேந்திரம், தணிகாசலம், காலஞ்சென்ற செல்வராணி, பவளகாந்தன், பரம்தில்லைராஜா, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லேகாள, காந்தரூபன், யசோதா, ராகுலன், தீபிகா, கீர்த்தனன், தனுசா, ஞானேஸ்வரன், சுவேதினி, ரூபன், சுமன், பிரவீனா, ருஷ்யந்தி, கிஷோக்குமார், பிரசாந்தி, பிரார்த்தன், கிருஷாந்தி, ஜெனகன், யதுஷன், யதீஷன், சுகீசன், நிரோஷினி, பவநீதன், பவித்ரா, யதர்ஷன், விதுஷா, அபிதா, அபிநயா, ஆகியோரின், பாசமிகு பேர்த்தியும்,அல்சா, அபிலாஸ், அனிறா, அபிநயன், நயனா, நிஷான், சோபியா, நதியா, மிதுன், சுவின், சக்தி, அரிஸ், டிசானி, நித்திஸ், நிஷா, தருண், நிதுஷன், ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபாற்கட்டை சந்தி,**
**இணுவில் தெற்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 10 . 10 . 1939



**மறைவு** 11 . 05 . 2021

### சின்னத்தம்பி கந்தசாமி

அங்களப்பாய் இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னதம்பி கந்தசாமி நேற்று (11.05.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், கந்தசாமி கமலாம்பிகையின் அன்புக் கணவரும், அன்னலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், மனோன்மனி, ஆனந்தராசா, சிவராசா, நாகேஸ்வரன், நடராசா, சிதம்பரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பகீரதி (பிரான்ஸ்), கமலராணி (இணுவில்), பாஸ்கரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பகாந்தா, ஸ்ரீதரன் (லண்டன்), துணைவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசிமிகு தந்தையும், சிவநேசன், பாலகிருஸ்ணன், கணேஸ்வரன், நிசாந்தினி, ஜெயமதனா, ஜெகனியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகரன், சுரேகா, விவேகா, திஷான், பானுஜா, கௌசிகா, நிவேதா, துவாரகா, தர்ஷிகா, கீர்த்திகா, சாருஜன், றக்ஷிகா, சஜித், துஷாரன், அமீனா, அக்ஷை ஆகியோரின் அன்புப் பேரனும், நவீன், தருண், அனிக்கா, லெனா, நிலன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12.05.2021) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தொ.பே: 077 677 1902**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்



## முள்ளிவாய்க்காலில்...

தமது அறிக்கையில், 'மே 18ஆம் திகதியை இனப்படுகொலை நாளாக தமிழ் மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். இனப்படுகொலைக்கு நீதி கேட்கும் மக்களுடன் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்' என்றும் ஆயர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ஆவது ஆண்டு நிறைவாகும். இறுதிப் போரின் போது கொல்லப்பட்டவர்களுக்கு இறுதிக் கிரியைகள்கூட செய்யமுடியாது புதைத்துவிட்டு தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்குச் சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் உயிரிழந்தவர்களை கண்ணீரோடு நினைவுகூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையுடைய நாளாகவும் அந்த நாள் இருக்கின்றது.

படுகொலை செய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்குகிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற போரிலும், குழப்பங்களிலும் தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து செபிக்கும்படியாகவும் கேட்டு நிற்கின்றோம். அனைத்து பங்குத் தந்தையர்களையும், துறவறக் குழுமங்களையும், மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களையும் மே 18ஆம் திகதி மாலை 6 மணிக்கு மூவேளை செப மணியொலி எழுப்பி ஈகைச் சுடரேற்றி அஞ்சலிக்கு மாறும், பொதுமக்கள் தத்தம் வீடுகளில் மௌன அஞ்சலிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அழைகின்றோம் - என்றுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பது தொடர்பில் சர்வதேசம் தனது வலுவான கருத்தைத் தெரிவித்து வருகின்றது. அத்துடன் கனடாவில் 'ஈழத்து இனப்படுகொலை வாரம்' கடைப்பிடிக்க உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு பின்னணியில் போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்த பின்னர் வடக்கு - கிழக்கு ஆயர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள இந்த அறிக்கையானது சர்வதேச அரங்கில் முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. (ம-319)

## மாகாணங்களுக்கு...

ணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ளன. இதனைக் கண்காணிப்பதற்காக மாகாண எல்லைகளில் சிறப்பு அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, பொலிஸாரின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நள்ளிரவு (நேற்று) தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும். மாகாணங்களுக்கு இடையிலான ரயில் போக்குவரத்தை ரத்துச்செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ரயில் சேவைகள் இடம்பெறும். அதேபோன்று அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகளும் நடைபெறாது. அத்தியயாவசிய தேவைகளுக்காக பேருந்துகளை பயன்படுத்தும் விதம் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்.

மாகாணங்களுக்குள் நடைபெறும் பேருந்துச் சேவைகளின்போது இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும். நின்று பயணிக்க அனுமதி இல்லை.

முச்சக்கரவண்டி ஓட்டுநரைத் தவிர இரண்டு பேரை மட்டுமே ஏற்றிச்செல்ல முடியும். அனைத்து பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகளும் ரத்து செய்யப்படுகின்றன. அனைத்து மாகாண எல்லைகளிலும் அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினரின் வீதித் தடை அமைக்கப்படும்.

விடுமுறை மற்றும் ஓய்வுக்கால பயணங்கள் அனுமதிக்கப்படாது. அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் தொழில் அடையாள அட்டையைக் காண்பித்து பயணங்களை மேற்கொள்ளமுடியும். வேறு மாகாணங்களில் இருந்து வருவோரை திருப்பி அனுப்புமாறு ஹொட்டல்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-ஒ.இ)

## வடக்கில்...

கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தல் நிலையம் இயங்கி வருகின்றது. வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையம் இன்று அல்லது நாளை இராணுவத்தினரால் சுகாதாரத் தரப்பினரிடம் கையளிக்கப்படவுள்ளது. நாவற்குழி அரச உணவுக் களஞ்சியமும் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்படவுள்ளது. இருப்பினும் இதற்குரிய பணிகளை இராணுவத்தினர் இன்றே ஆரம்பிக்கவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம், பாரதிபுரம் மற்றும் இயக்கச்சி பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பிலும் தனிமைப்படுத்தல் நிலையம் இயங்கி வருகின்றது. மன்னார் மாவட்டத்தில் பாடசாலை ஒன்று தனிமைப்படுத்தல் மையமாக மாற்றப்பட்டு வருகின்றது. வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இது இன்று அல்லது நாளை இராணுவத்தினரால் சுகாதாரத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பணத்தை...

இராஜாங்க அமைச்சு கடிதம் அனுப்பியுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்குரிய பயனாளிகள் பட்டியல் தெரிவை மீளாய்வு செய்வதற்காக அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருவார்கள் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொரோனா நிலைமை காரணமாக அந்த மீளாய்வு நடவடிக்கை இடம்பெறவில்லை.

இந்த நிலையில் மாவட்டச் செயலருக்கு இராஜாங்க அமைச்சால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்பட்ட பயனாளிகளின் பட்டியலுக்கு அமைவாக அவர்களது வீட்டுத் திட்டத்துக்குரிய முதற்கட்ட நிதி விடுவிக்கப்படுகின்றது. அந்தப் பயனாளிகள் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்படும்போது அவர் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால் வழங்கப்பட்ட பணத்தை மீளப் பெற்றுச் செலுத்தவேண்டியது மாவட்டச் செயலரின் பொறுப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், அந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களைக் குறிப்பிட்டு பிரதேச செயலர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில், தவறான பயனாளி தெரிவுசெய்யப்பட்டால் அவருக்கு வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெற்று செலுத்தவேண்டிய பொறுப்பு பிரதேச செயலருக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## தொற்றாளர்...

வன்னியாராச்சி தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண மக்களுக்கு எப்போது தடுப்பூசி ஏற்றப்படும் என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தாண்டு கொத்தணி எல்லா மாவட்டங்களிலும் பரவலடைந்துள்ளது. இந்த நிலையில் முதல் கட்டமாக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை தடை செய்துள்ளோம். கொரோனாத் தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மாகாணமாக மேல் மாகாணமே காணப்படுகின்றது.

இந்த நிலையில் முதல் கட்டமாக அந்த மாகாணத்தில் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை கண்டறிந்து அந்த மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றும் பணிகளை முன்னெடுக்கின்றோம்.

அதற்கு அடுத்தபடியாக தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாகாணங்கள் அடையாளம் காணப்பட்டு அந்த மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவோம். எதிர்வரும் நாள்களில் வெளிநாடுகளிலிருந்து நாம் எதிர்பார்க்கின்ற தடுப்பூசிகள் வந்தடையவுள்ளன -என்றார். (ஒ.5,22)

## 55 பேருக்கு

ணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீடம் ஆகியவற்றின் ஆய்வுகூடங்களில் இன்று (நேற்று) ஆயிரத்து 18 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும் வவுனியா மாவட்டத்தில் 7 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும், பூவரசம்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட 19 பேருக்கும் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 14 பேருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவருக்கும் என 35 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 2 பேருக்கும், கோப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 7 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நில அளவைகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் நெல்லியடி சந்தைத் தொகுதியைச் சேர்ந்தவர். நல்லூர் மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா இருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது' - என்றார். (ம-26)

## சிறையில்...

பெற்றுள்ள பேரறிவாளன், முருகன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்யவேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சியினரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் 7 பேர் விடுதலை தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின், அரசின் தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், சட்டத்துறை அமைச்சர் ரகுபதி ஆகியோருடன் சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டார்.

7 பேரை விடுதலை செய்வது தொடர்பாக சட்டப்பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாக இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது. முன்னதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் 7 பேர் விடுதலை தொடர்பாக தமிழக அரசை வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## தீவுகளில்...

வசிய சேவை வழங்குநர் தவிர்ந்த வெளியாருக்கான பிரயாணத் தடை ஊர்காவற்றுறை கொரோனா தடுப்புச் செயலணியால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளிகள் இல்லாத மேற்படி பிரதேசங்களில் நோய் பரவலைத் தடுக்கவும் நோய் ஏற்படின் நோயாளியை பிரதான நிலப்பரப்புக்கு இடம் மாற்றுவதில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டுமே இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் எழுவைதீவில் இவ்வாரம் நடைபெறவிருந்த மருத்துவ முகாமும் பிற்போடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 03 - 1959



மறைவு 09 - 05 - 2021

### திரு. திருமேனி சிறிஸ்காந்தராசா

வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமேனி சிறிஸ்காந்தராசா (சிறி) கடந்த (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெயவதனாவின் அன்புக் கணவரும், சோபிதன், நிதுர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2021) புதன்கிழமை ஜேர்மனியின் நேரத்திற்கு பிற்பகல் 2.00மணி இலங்கை நேரம் பிற்பகல் 6.30 மணியளவில் ஜேர்மனியில் இடம்பெறும். அதே நேரம் அச்சுவேலி வளலாயில் அவரது சகோதரியின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

077 575 4086

தகவல்
சகோதரர்கள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 04 . 1950



மறைவு 10 . 05 . 2021

### இராசேந்திரம் தவமணி

நீர்வேலி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் தவமணி 10.05.2021 அன்று காலமானார்.

அன்னார் கந்தன் - யோகியின் அன்பு மகளும், கனகு - பூரணத்தின் அன்பு மருமகளும், இராசேந்திரத்தின் (பொன்ராசா) பாசமிகு மனைவியும், மாணிக்கத்தின் அன்புத் தங்கையும், மெரிஸ்ரலா, மெரிஸ்ரலன், யுவாஸ்கரன், யுவாகினி, ராதா, நிஸாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்ரோசுலலி, காலஞ்சென்ற ரவியின் அன்பு மைத்துனியும், வசந்தநாதன், கரன், ரமணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மேற்றா, வினி, மஸ், நிருஷன், ஆருஷன், சாருஷன், றக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாக்கியம், றஞ்சினி, அன்ரனிப்பிள்ளை, காலஞ்சென்ற கணேசரத்தினம் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.05.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செபமணி மரியரத்தினம் (ராணி)



பிறப்பு 04.01.1950

இறப்பு 10.05.2021

கரம்பனைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபமணி மரியரத்தினம் கடந்த (10.05.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியான் (இரத்தினம்) சலேற்றம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கபிரியேல் இன்னாசி, ஆனந்தம் (மாணிக்கம்) தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செபமணியின் அன்பு மனைவியும், அல்பிரட் (ஓய்வுபெற்ற இலங்கை புகையிரத அதிகாரி, திருகோணமலை), மரியபுனிதசீலி (இந்தியா), ஆரோக்கியநாயகம் (சிறி-கொழும்பு), மரியபுஸ்பராணி (இந்தியா), காலஞ்சென்ற மரியகொலஸ்ரிகா (மங்களா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டிலோஜன் (இந்தியா), காலஞ்சென்ற ஜயந்தன், பிரியந்தன் (German institute owner), மகிந்தன் (ஜேர்மனி), யூட்சுகந்தன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயும், கஜேந்தினி (German institute Teacher), மெலானி (ஜேர்மனி), ஜனனி (நெதர்லாந்து) ஆகியோரின் மாமியும், மிர்த்ஜீன், வருண் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 224, கோவில் வீதியில் உள்ள இல்லத்திலிருந்து புங்குடுதீவு புனித சவேரியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 293 5265 (மகன்-பிரியந்தன்)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் உயிரிழந்தவரின் இறுதிச்சடங்கால் 21 பேர் உயிரிழப்பு

CHEMISTRY A/L
தனி/குழு வகுப்புகள் Home visited Tamil / English வவுனியா / கிளிநொச்சி / யாழ். வடமராட்சி/ தென்மராட்சி. விளக்கவுரையுடன்
சிங்கம் மாஸ்டர் - 076 056 5786

டில்லி, மே 12

**கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலத்தை பொதியிலிருந்து பிரித்து இறுதிச் சடங்கை மேற்கொண்டமையால், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 21பேர் உயிரிழந்துள்ளனர். இந்த அவலம் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் அரங்கேறியுள்ளது.**

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படாமல் சுகாதாரப் பணியாளர்களே அவற்றை எரித்து வந்தனர்.

ஆனால் குடும்பத்தவர்கள் கோரிக்கை விடுத்தால் அவர்கள் இறுதிச்சடங்குகளை மேற்கொள்ள முடியும் என்று சுகாதாரத்துறை அமைச்சு அனுமதி வழங்கியது. அவ்வாறு குடும்பத்தவர்கள் இறுதிச் சடங்கை மேற்கொள்ளும் போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகள் தொடர்பிலும் அமைச்சு அறிவுறுத்தியிருந்தது.

இந்த அறிவுறுத்தல்களைக் கணக்கிலெடுக்காமல் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் உடலை அடக்கம் செய்ய முற்பட்டமையால் ஒரு கிராமமே பெருந்துயரைச் சந்தித்துள்ளது.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் சிகார் மாவட்டத்தில் கீர்வா கிராமத்திலேயே இந்தப் பெருந்துயர் நடந்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளானவர் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவரது இறுதிச் சடங்கில் 150 பேர் கலந்து கொண்டுள்ளனர். அவரது உடலைச் சுற்றி போர்த்தியிருந்த பிளாஸ்டிக் கவசத்தை பிரித்து, பலரும் உடலைத் தொட்டுள்ளனர். இதனால் இறுதிச் சடங்கில் பங்கேற்ற 21பேர் வரையில் அடுத்தடுத்து உயிரிழந்து கிராமமே சோகமாகியுள்ளது. (ஒ.இ)





## பாடசாலையில் துப்பாக்கிச் சூடு 8 சிறுவர்கள் துடிதுடித்துச் சாவு

மொஸ்கோ, மே 12

ரஷ்ய நகரமான கசானில் உள்ள பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் எட்டு சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மொஸ்கோ நகருக்குக் கிழக்கே 820 கிலோமீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்னர் என்றும், இந்தச் சம்பவத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் தடுத்து வைக்கப்பட்டுள்ளான் என்று குறிப்பிட்டுள்ள அந்த நாட்டு ஊடகங்கள், இரண்டாவது தாக்குதல்தாரி தொடர்பான விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளன.

சம்பவ இடத்துக்கு அதிக ஆயுதமேந்திய பொலிஸ் மற்றும் அவசர வாகனங்கள் பாடசாலை வளாகத்துக்குள் பரபரப்பாக இயங்கி கொண்டிருப்பதை அங்கிருந்து நேரடியாக வெளியாகும் காணொளிகளில் அவதானிக்க முடிகின்றது என்றும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

தாக்குதலை அடுத்து சில சிறுவர்கள் தப்பிக்க ஜன்னல்களிலிருந்து குதிப்பதும், தாக்குதல் காயமடைந்தவர்கள் வெளியேற்றப்படுவர்களையும் காண முடிகின்றது என்றும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ-இ)




## இந்தியாவுக்கு உதவும் ருவீற்றர்

சென்னை, மே 12

கொரோனா நிவாரண நிதியாக இந்தியாவுக்குச் சுமார் 110 கோடி ரூபாவை வழங்க ருவீற்றர் நிறுவனம் நிறுவனம் முன்வந்துள்ளது.

இது தொடர்பான தகவல்களை ருவீற்றர் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான ஜேக் பேட்ரிக் டோர்சே தெரிவித்துள்ளார்.

இந்த உதவி தொகை மூன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பிரித்து வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். ஒக்சிஜன் செறிவூட்டிகள், வென்டி லேட்டர்கள் உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்ய இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## கொரோனாவில் மீண்டாலும் பக்கவிளைவுகளால் அச்சம்!

சென்னை, மே 12



கொரோனா தொற்றில் இருந்து மீண்டு வரும் நோயாளிகளுக்கு மோசமான பின்விளைவுகள் ஏற்படுகின்றன. அவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும் என்று இந்திய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றில் இருந்து மீண்டு வரும் நோயாளிகளுக்கு நெஞ்சுவலி, பார்வைக் குறைப்பாடு, மூச்சுவிடுவதில் சிரமம், இரத்தம் சொட்டும் இருமல் போன்ற பின்விளைவுள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் தற்போது நோயாளிகளிடம் காணப்படும் கரிய தேமல் போன்ற அடையாளம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீரிழிவு நோயாளர்களுக்கே இந்தப் பாதிப்புக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் இவ்வகை கரிய தேமலுடனான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்போது நீரிழிவு நோய்களுக்கு உடலில் ஏற்படும் மாற்றம், பாதிப்புகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து குணப்படுத்த வேண்டும் என்று இந்திய மருத்துவ ஆய்வு சபை தெரிவித்துள்ளது. (எ-இ)

# தமிழக சட்ட சபை கூடியது உறுப்பினர்கள் பதவியேற்பு



சென்னை, மே 12

மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் தமிழக சட்டப் பேரவை நேற்று முதன்முறையாகக் கூடியது. முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்ட மன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அந்தக் கட்சியின் தலைவரான முதல்வர் கடந்த 7ஆம் திகதி பதவி ஏற்றார். அவருடன் 33 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர். தற்காலிக அவைத் தலைவராக கு.பிச்சாண்டி ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்றுக்கொண்டார்.

இந்தநிலையில் 16 ஆவது சட்ட சபையின் முதல் கூட்டத் தொடர் தற்காலிக சட்டப்பேரவையான சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது. அனைத்துக் கட்சியைச் சேர்ந்த வெற்றி பெற்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்றுக்கொண்டனர். முதல்வர் ஸ்டாலின் பதவியேற்றதும், அமைச்சர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் உறுதி மொழி எடுத்தனர். இன்று சட்ட சபை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகருக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் கட்சியான தி.மு.கவில் 125 உறுப்பினர்கள் உள்ளதால் அவர்கள் முன்னிறுத்தும் வேட்பாளர்களே வெற்றி பெறுவார்கள். நாளை நடைபெறும் கூட்டத்தில் புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டவுடன் சட்ட சபைக் கூட்டத் தொடர் எத்தனை நாள்கள் நடைபெறும் என்பதை சட்ட சபை அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு செய்யும். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org